வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959

விலை ரூ. 20/=

# ஈழநாடு
Eelanadu

Email : news@eelanadu.lk | மலர் : 01 | 16.08.2021 திங்கட்கிழமை | இதழ் : 255 | பக்கங்கள் : 16





07 கிழக்கை நெருங்குகிறது பேராபத்து!


11 11 ஆயிரம் தொற்றாளர்கள் வீடுகளில் தனிமைப்படுத்தல்


12 ஆப்கானிஸ்தான் ஆட்சியை கைப்பற்றினர் தலிபான்கள்!


13 2ஆவது இனிங்ஸில் இந்தியா தடுமாற்றம்

# மேலும் 161 பேர் பரிதாப உயிரிழப்பு 6,000ஐ கடந்தது மொத்த மரணம்

கொழும்பு, ஓக. 16

நாட்டில் கொரோனா மரணங்களின் மொத்த எண்ணிக்கை 6 ஆயிரத்தைக் கடந்துள்ளது.

மேலும் 161 பேர் கொரோனா வைரஸ் தொற்றால் நேற்றுமுன்தினம் உயிரிழந்தனர்.

இதுவே நாட்டில் இதுவரை ஒரே நாளில் பதிவான அதிகூடிய கொரோனா மரண எண்ணிக்கையாகும்.

சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்தின் உறுதிப்படுத்தலுடன் அரச தகவல் திணைக்களத்தால் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில் இந்த மரணங்கள் தொடர்பான விபரங்கள் வெளியிடப்பட்டுள்ளன.

இதன்படி நாட்டில் பதிவான கொரோனா மரணங் 15

## நாளாந்தம் எகிறும் தொற்றாளர்கள்
# 3,435 பேருக்கு கொரோனா

கொழும்பு, ஓக. 16

நாட்டில் மேலும் 3 ஆயிரத்து 435 பேர் கொரோனா வைரஸ் தொற்றுடன் நேற்று அடையாளம் காணப்பட்டுள்ளனர் என்று அரச தகவல் திணைக்களம் அறிவித்துள்ளது.

அதற்கமைய, நாட்டில் இதுவரை அடை 15

# நாட்டை முடக்க அரசு எந்த நேரமும் தயார்!

## சுகாதார நிபுணர்கள் உத்தியோகபூர்வமாக பரிந்துரைக்கவேண்டும் என்கிறார் ஜயசுமண

கொழும்பு, ஓக. 16

"கொரோனாவின் தீவிரத்தால் நாட்டை முற்றாக முடக்க அரசு எந்த நேரமும் தயாராக இருக்கின்றது. ஆனால், நாட்டை முடக்குமாறு சுகாதார நிபுணர்கள் உத்தியோகபூர்வமாகப் பரிந்துரைக்க வேண்டும். அவ்வாறு அவர்கள் பரிந்துரைத்தால் அதனை உடனே செயல்படுத்த அரசு தயார். எனினும், இது 15

# இரவு நேர ஊரடங்கு இன்று முதல் அமுல்

## அத்தியவசிய சேவைகள் பாதிக்கப்படாமல் நடைமுறைப்படுத்தப்படும் என அறிவிப்பு

கொழும்பு, ஓகஸ்ட் 16

இலங்கையை முழுமையாக முடக்குமாறு அரசுக்கு அழுத்தங்கள் அதிகரித்துவரும் நிலையில் இன்று முதல் மறு அறிவித்தல் வரை தினசரி இரவு 10 மணி முதல் அதிகாலை 4 மணிவரை நாடளாவிய ரீதியில் ஊரடங்குச் சட்டம் அமுலில் இருக்கும் என இராணுவத் தளபதி ஜெனரல் சவேந்திர சில்வா நேற்றிரவு அறிவித்துள்ளார். 15

# திருமண நிகழ்வுகளுக்கு தடை; ஒன்றுகூடவும் அனுமதி இல்லை


கொழும்பு, ஓக. 16

நாட்டில் மக்கள் ஒன்றுகூடும் அனைத்து நிகழ்வுகளுக்கும் நேற்று நள்ளிரவு முதல் மறு அறிவித்தல் வரை தடை விதிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, நாளை முதல் மறு அறிவித்தல் வரை திருமண நிகழ்வுகள் மற்றும் விழாக்களுக்கு 15

# 12 வயதுக்கு மேற்பட்ட சிறுவர்களுக்கும் கொரோனா தடுப்பூசி கொடுக்க திட்டம்

## பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ அறிவிப்பு



கொழும்பு, ஓக. 16

பன்னிரெண்டு வயதிற்கு மேற்பட்ட சிறுவர்களுக்கு கட்டம் கட்டமாக கோவிட் தடுப்பூசிகளை பெற்றுக் கொடுப்பதற்கு அரசாங்கம் திட்டமிட்டுள்ளதாக பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ நேற்றுத் தெரிவித்தார். சிறுவர்களுக்கு தடுப்பூசி வழங்கும் போது பல்வேறு பிரச்னைகள் காணப்படும் சிறுவர்களுக்கு முன்னுரிமை வழங்கப் 15

# யாழ்ப்பாணத்தில் 70 பேர் உட்பட வடக்கில் நேற்று 104 தொற்றாளர்

யாழ்ப்பாணம், ஓக. 16

யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் நேற்று 581 பேரின் மாதிரிகள் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டன. இதில் 104 பேருக்கு தொற்று உறுதிப்படுத்தப்பட்டது.

இதன்படி, யாழ்ப்பாணம் மாவட்டத்தில் தெல்லிப்பழை மருத்துவ அதிகாரி பிரிவில் 26 பேரும், வேலணை மருத்துவ அதிகாரி பிரி 15

# டெல்டா உள்ளிட்ட புதிய வைரஸ்கள் எதிர்வரும் நாட்களில் தீவிரமடையும்

## ஆபத்தை சுட்டிக்காட்டுகின்றார் சன்ன ஜயசுமண

கொழும்பு, ஓக. 16

"இலங்கையில் டெல்டா வைரஸ் பரவல் எதிர்வரும் நாட்களில் அதிகரிக்கக் கூடும். அதேவேளை, டெல்டா வைரஸ் மாத்திரமின்றி ஏனைய புதிய நிலைமாறிய வைரஸ்கள் தோன்றக்கூடிய ஆபத்துக்களும் காணப்படுகின்றன."

- இவ்வாறு இராஜாங்க அமைச்சர் பேராசிரியர் சன்ன ஜயசுமண தெரிவித்தார்.

அநுராதபுரத்தில் நேற்று ஊடகங்களுக்குக் கருத்து வெளியிடும்போதே அவர் மேற்கண்டவாறு 15

# முகநூலில் பதிவிட்ட மருத்துவரிடம் சி.ஐ.டி. விசாரணை

கொழும்பு, ஓக. 16

அவிசாவளை பொது வைத்தியசாலையின் கோவிட் விடுதியில் கடமையாற்றும் மருத்துவர் நஜித் இந்திக சி.ஐ.டி.யினரால் விசா 15

# கோப்பாயில் டிப்பர் மோதி இளம் குடும்பப்பெண் பலி!



யாழ்ப்பாணம், ஓக. 16

கணவருடன் மோட்டார் சைக்கிளில் சென்றவரை பின்னால் வந்த டிப்பர் வாகனம் மோதியது. இதில் நிலை தடுமாறி விழுந்த பெண்ணின் தலைமீது டிப்பர் சில்லு ஏறியதில் தலைசிதறி சம்பவ இடத்திலேயே மரணமானார். 15

## இப்படியும் நடக்கிறது...!

ஒரு தந்தையும் மகனும் தங்களுடைய கழுதையை விற்பதற்காக சந்தைக்கு ஓட்டி சென்று கொண்டிருந்த னர். அதைப் பார்த்த வழிப்போக்கர்கள் சிலர் இவர்க ளைப் பார்த்து, "அற்புதமான கழுதையை ஓட்டிக் கொண்டு நடந்து சென்று கொண்டிருக்கிறார்கள். இவர்களில் யாரா வது அதில் ஏறிச் செல்லலாமே", என்று ஏளனம் செய்தனர்.

இதனால் வெட்கப்பட்டுப் போன தந்தையும் மகனும் ஒரு முடிவு செய்து, வயதில் சிறியவனான மகன் கழுதை யின் மேல் உட்கார்ந்து கொண்டும், தந்தை நடந்தவா றும் போனார்கள். அப்போது வேறு சில வழிப்போக்கர் கள், "இங்க பாருடா அநியாயம்! பெரியவர் நடக்கமுடி யாமல் நடக்கிறார், இந்த பையன் சொகுசா கழுதை சவாரி செய்கிறான்", என்று கிண்டலடித்தனர்.

இதைக்கேட்டு இவர்கள் கூறுவதில் நியாயம் இருப் பதாக உணர்ந்த பையன், தந்தையைக் கழுதையில் உட்கார வைத்து இருவரும் புறப்பட்டனர். இன்னும் சற்று தூரம் சென்ற பின் மற்றுமொரு வழிப்போக்கன் இவர்களைப் பார்த்து "பெரியவர், ஒரு நோஞ்சான் பையனை நடக்கவிட்டு தான் மட்டும் சொகுசாக கழுதை மேல் ஏறிப்போகிறார்", என்றான். வழக்கம் போல இதைக்கேட்ட தந்தை - மகன் இருவரும் ஒரு சேர கழுதைமேல் ஏறிகொண்டனர். இனி இந்த உல கம் தங்களைப் பார்த்துக் கேலி பேசாது என்று தந்தை கூறினார்.

கொஞ்சதூரம் சென்றபின் இன்னொரு வழிப்போக் கன் இவர்களைப் பார்த்து, "இரண்டு தடியன்கள், ஒரு நோஞ்சான் கழுதையின் மேல் ஏறி சவாரி செய்கிறார்கள் இரக்கங்கெட்ட ஜென்மங்கள்!", என்று காட்டமாக விமர்சித்தான்.

இதைக்கேட்டு வருந்திய தந்தையும், மகனும் கழுதை யிலிருந்து குதித்தனர். இனி என்ன செய்வது? என்று சிந்தித்தனர். நீண்ட ஆலோசனைக்குப் பிறகு, "மக்கள் மனம் மகிழ கழுதையை நாம் கட்டித் தோளில் சுமந்து செல்வோம்!" என்று முடிவு செய்தனர்.

அவ்வாறு கழுதையைத் தோளில் சுமந்து செல்கை யில் வழியில் ஓர் ஆறு குறுக்கிட்டது. அதைக் கடக்கை யில் கழுதை மிரண்டு போய் வெள்ளத்தில் விழுந்தது. கால்கள் கட்டப்பட்டிருந்ததால் அதனால் நீந்த முடிய வில்லை! எனவே, அது ஆற்று வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்டது. தந்தையும் மகனும் செய்வதறியாது திகைத்து நின்றனர்.

இந்தக் கதைதான் இந்தச் செய்திகளைப் படிக்கின்ற போது ஞாபகத்திற்கு வருகின்றது.

நாட்டில் கொரோனாவின் டெல்டா திரிபு வைரஸ் கோரத்தாண்டவமாடி வருகின்றது. வீதியில் சென்று கொண்டிருக்கின்றவர்கள் சுருண்டு விழுந்து மடிந்து வருகின்றனர்.

சில மாதங்களுக்கு முன்னர் இதே நிலைமை இந்தி யாவில் இருந்ததை நாம் கருத்தில் எடுக்கவில்லை. எப் போதுமே அடுத்தவீட்டில் என்ன நடந்தாலும் கண்டு கொள்ளாத மனநிலையில் வாழப் பழகிவிட்ட நமக்கு, இந்தியாவில் நடந்தது என்ன அச்சுறுத்லைத் தந்துவிடப் போகின்றது?

இன்று அந்த நிலைமை நம்மை வந்தடைந்திருக்கின் றது. எல்லோரும் தத்தமக்குத் தெரிந்த யோசனைகளைச் சொல்கின்றனர். பலர் எச்சரிக்கை விடுக்கின்றனர்.

இரண்டு வாரங்களில் நாடு மிகமோசமான நிலையை எதிர்கொள்ளும் என்று நான்கு வாரங்களுக்கு முன்னரே பலர் கூறத் தொடங்கியிருந்தனர்.

இப்போதெல்லாம் யார் வேண்டுமானாலும் என்ன வும் சொல்லலாம் என்ற நிலைமை. எதையாவது (தமக்கு பட்டதை) சொல்லவேண்டும் என்றால் உடனே ஊடக வியலாளர் மாநாட்டை கூட்டுவதும் அதனை செய்தி யாக்குவதாகவும் போய்க்கொண்டிருக்கின்றது.

நாங்கள் சொல்வது சமுதாயத்தில் எத்தகைய தாக் கத்தை ஏற்படுத்தும்? அதனால் எத்தகைய விளைவுகள் ஏற்படும் என்பதைப்பற்றி யாரும் எண்ணிப்பார்ப்பதாகத் தெரியவில்லை.

தடி எடுத்தவன் எல்லாம் தண்டக்காரன் ஆகக்கூடாது. எத்தகைய கருத்தைச் சொல்வதானாலும் சமுதாயப் பொறுப்போடு சொல்லவேண்டும்.

நாட்டை முடக்குங்கள் என்று அரசுக்குச் சொல் வதைவிட, மக்களே நீங்களாக முடங்குங்கள் என்று சொல்வது இன்னும் மக்களுக்கு உறைக்குமோ?

**- ஊர்க்குருவி**

# போக்குவரத்து மருத்துவ நிறுவனத்தின் சேவைகள் மட்டுப்படுத்தப்பட்டுள்ளன!

கொழும்பு, ஒக. 16

நாட்டின் தற்போதைய கோவிட்-19 நிலையை கருத்திற் கொண்டு, தேசிய போக்குவரத்து மருத்துவ நிறுவனத்தின் சேவை கள் மட்டுப்படுத்தப்பட்டுள்ளன என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

225 என்ற துரித இலக்கத் துடன் தொடர்புகொண்டு அல்லது நுகேகொடையில் உள்ள அதன் தலைமை அலு வலகம் மற்றும் வெரஹேர உள் ளிட்ட கிளைகளில் இணை யத்தின் மூலம் முன்பதிவு செய் யும் நபர்களுக்கு சேவைகள் வழங்கப்படும் என்று அந்த நிறுவனம் வெளியிட்ட அறிக் கையில் சுட்டிக்கட்டப்பட் டுள்ளது.

எனினும், தேசிய போக்கு வரத்து மருத்துவ நிறுவனம் நீதிமன்றத்தால் கேட்கப்படும் ஓட்டுநர் மருத்துவ மதிப்பீடு களுக்கு கட்டுபாடின்றி சேவை களை வழங்கும். (ஐ)



## கிளிநொச்சியில் கிணற்றில் சடலம்!

கிளிநொச்சி, ஒக. 16

பாயால் சுற்றப்பட்ட நிலை யில் பாவனையின்றிய கிணறு ஒன்றிலிருந்து ஆண் ஒருவரின் சடலம் கண்டுபிடிக்கப்பட் டுள்ளது.

கிளிநொச்சி - இரத்தினபுரம் பகுதியிலேயே நேற்று இந்த சட லம் கண்டுபிடிக்கப்பட்டது.

நேற்றைய தினம் காணி உரி மையாளர்கள் தங்கள் காணியை சென்று பார்த்தபோதே கிணற் றுள் சடலம் கிடப்பதை கண்டு அவர்கள் பொலிஸாருக்கு தகவல் தெரிவித்தனர்.

கிணற்றுக்கு அண்மையாக சில தடயங்களை கண்ட பொலி ஸார் இதனை கொலை என்ற கோணத்தில் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர். (ஐ)

## தென்மராட்சி விபத்து: முதியவர் படுகாயம்

தென்மராட்சி, ஒக. 16

டிப்பரும் மோட்டார் சைக் கிளும் மோதிய விபத்தில் முதிய வர் ஒருவர் படுகாயமடைந் துள்ளார்.

இந்த விபத்து நேற்று பிற்பகல் தென்மராட்சி - தனங்கிளப்பு பகுதியில் இடம்பெற்றுள்ளது.

இதன்போது மோட்டார் சைக்கிளில் பயணித்த முதியவர் படுகாயமடைந்த நிலையில் சாவகச்சேரி வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார். பின்னர், அங் கிருந்து மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா மருத்துவம னைக்கு மாற்றப்பட்டார் என்று தெரிய வருகின்றது. (ஐ)

கல்வி tv CHANNEL-1

**02.08.2021**
**திங்கட்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 05.15 | தரம்-06 | தமிழ் |
| 06.00 | தரம்-07 | விஞ்ஞானம் |
| 06.45 | தரம்-08 | கணிதம் |
| 07.30 | தரம்-09 | விஞ்ஞானம் |
| 08.15 | தரம்-10 | விஞ்ஞானம் |
| 09.00 | மாணவர்களுக்கானது | ஆலோசனை |
| 09.15 | க.பொ.த.உயர்தரம் | தமிழ் |
| 10.15 | க.பொ.த.உயர்தரம் | பொருளியல் |
| 11.15 | க.பொ.த.உயர்தரம் | கணிதம் |
| 12.15 | General knowledge | General knowledge |
| 12.30 | 06 TO சாதாரணதரம் | English |
| 01.15 | க.பொ.த. சா.தரம் | English |
| 02.00 | க.பொ.த. சா.தரம் | தமிழ் |
| 02.45 | க.பொ.த. சா.தரம் | ICT |
| 03.30 | க.பொ.த சா.தரம் | வரலாறு |
| 04.15 | க.பொ.த. சா.தரம் | புவியியல் |
| 05.00 | A/Lவினாத்தாள் | Live Telecast உயிரியல் |
| 06.00 | தரம்-05 | புலமைப்பரிசில் |
| 07.00 | A/Lவினாத்தாள் | மறுஒளிபரப்பு உயிரியல் |
| | | மறு ஒளிபரப்பு |
| | | அனைத்துப்பாடங்களும் |
| 08.00 | தரம்- 05 | புலமைப்பரிசில் |
| 09.00 | க.பொ.த.உயர்தரம் | தமிழ் |
| 10.00 | க.பொ.த.உயர்தரம் | பொருளியல் |
| 11.00 | க.பொ.த.உயர்தரம் | கணிதம் |
| 12.00 | 06 TO Learning English | English |
| 12.45 | க.பொ.தா சா.தரம் | English |
| 01.30 | க.பொ.தா சா.தரம் | தமிழ் |
| 02.15 | க.பொ.தா சா.தரம் | ICT |
| 03.00 | க.பொ.தா சா.தரம் | வரலாறு |
| 03.45 | க.பொ.தா சா.தரம் | புவியியல் |
| 04.30 | தரம்-10 | விஞ்ஞானம் |

கல்வி tv CHANNEL - 2

**02.08.2021**
**திங்கட்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 06.00 | பஞ்சபுராணம் | பஞ்சபுராணம் |
| 06.15 | நற்கருணை | நற்கருணை |
| 06.30 | திருக்குறள் பொருள் | நாள் ஒரு திருக்குறள் |
| 06.45 | PLAY GROUP | கதை |
| 07.30 | முன்பள்ளி | ஆரம்பநிலை பாடங்கள் |
| 08.15 | தரம்-01 | சுற்றாடற்கல்வி |
| 09.00 | தரம்-02 | கணிதம் |
| 09.45 | தரம்-03 | சுற்றாடற்கல்வி |
| 10.30 | தரம்-03 | தமிழ் |
| 11.15 | தரம்-04 | சுற்றாடற்கல்வி |
| 12.30 | தரம்-04 | தமிழ் |
| 01.15 | தரம்-05 | சுற்றாடற்கல்வி |
| 02.00 | தரம்-05 | தமிழ் |
| 02.45 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 03.30 | PLAY GROUP | கதை |
| 04.15 | முன்பள்ளி | ஆரம்பநிலை பாடங்கள் |
| 05.00 | தரம்-01 | English Cartoon |
| 05.15 | தரம்-02 | கணிதம் |
| 06.00 | தரம்-03 | சுற்றாடற்கல்வி |
| 06.45 | தரம்-03 | தமிழ் |
| 07.30 | தரம்-04 | சுற்றாடற்கல்வி |
| 08.15 | தரம்-04 | தமிழ் |
| 09.00 | தரம்-05 | சுற்றாடற்கல்வி |
| 09.45 | தரம்-05 | தமிழ் |
| 10.30 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 11.15 | தரம்-03 | சுற்றாடற்கல்வி |
| 12.30 | தரம்-03 | தமிழ் |
| 01.15 | தரம்-04 | சுற்றாடற்கல்வி |
| 02.00 | தரம்-04 | தமிழ் |
| 02.45 | தரம்-05 | சுற்றாடற்கல்வி |
| 03.30 | தரம்-05 | தமிழ் |
| 04.15 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 05.00 | English | CARTOON |
| 05.30 | English | பாட்டு |

Eelanadu
16.08.2021 திங்கட்கிழமை
பிலவ வருடம், ஆடி 31

**"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"**
- யோகர் சுவாமிகள்.

E-mail: editor@eelanadu.lk,
news@eelanadu.lk
**தொலைபேசி : 021 730 1370**

# அமைச்சரவை மாற்றத்திற்கு பின்னால்?

அமைச்சரவையில் சில மாற்றங்கள் இடம்பெறவுள்ளதான செய்திகள் வெளியாகியிருக்கின்றன. தற்போது கல்வி அமைச்சராக இருக்கின்ற பேராசிரியர் ஜீ. எல். பீரிஸ், வெளிவிவகார அமைச்சராக நியமிக்கப்படலாம் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. எவர், எந்த அமைச்சராக நியமிக்கப்படுவார் என்பதற்கு அப்பால், அரசாங்கம் நெருக்கடிகளிலிருந்து மீள்வதற்கான புதிய உபாயங்கள் தொடர்பில் சிந்திக்கின்றது என்பது வெள்ளிடைமலை.

அண்மைக்காலமாக அரசாங்கம் பல்வேறு நெருக்கடிகளை எதிர்கொண்டு வருகின்றது. கொரோனா பெருந்தொற்றின் காரணமாக சரிவடைந்து செல்லும் பொருளாதார நிலைமைகள் ஒருபுறம் என்றால், மறுபுறமோ, பொறுப்புக்கூறல் தொடர்பான விடயங்களின் அடிப்படையிலான சர்வதேச அழுத்தங்கள். ஆரம்பத்தில் சண்டித்தனம் மூலம் இவ்வாறான சவால்களை எதிர்கொள்வது தொடர்பில் மட்டுமே அரசாங்கம் கவனம் செலுத்தியிருந்தது. ஆனால், தற்போது அரசாங்கத்தின் அணுமுறைகளில் மாற்றங்கள் தெரிகின்றன.

சில விடயங்களைக் கையாள முடியாமல் அரசாங்கம் தடுமாறுகின்றது. ஆரம்பத்தில் கடும்போக்கான முகத்தின் ஊடாக அனைத்து விடயங்களையும் கையாள முடியுமென்று நம்பிய கோட்டாபய ராஜபக்ஷ அரசாங்கம், தற்போது படிப்படியாக அதன் அணுகுமுறைகளில் மாற்றங்களை ஏற்படுத்த முயற்சிக்கின்றது. இதன் முதல் கட்டமாக, பஸில் ராஜபக்ஷ நிதி அமைச்சராக மீண்டும் பொறுப்பேற்று, அரசியலுக்குள் பிரவேசித்தார். இதனைத் தொடர்ந்து, அரசாங்கத்தின் முகம் மெதுவாக மாற்றமடையும் என ஈழநாடு அப்போது எதிர்வு கூறியிருந்தது. தற்போது அதன் இரண்டாம் கட்ட மாற்றங்களை நோக்கி அரசாங்கம் செயல்பட ஆரம்பித்திருக்கின்றது.

கோட்டாபய ராஜபக்ஷவின் அரசாங்கம் தொடர்பில் சர்வதேச சமூகத்தின் மத்தியில் எதிர்மறையான அபிப்பிராயங்களே காணப்படுகின்றன. குறிப்பாக ஓய்வுபெற்ற இராணுவ அதிகாரிகள் பலரை முக்கிய பொறுப்புக்களில் நியமித்தமை விமர்சனங்களை ஏற்படுத்தியிருந்தன. அரசாங்கத்தின் பக்கத்தில், இராஜதந்திர சமூகம் விரும்பக்கூடிய முகங்கள் மிகவும் குறைவாகவே இருந்தன. இவ்வாறான ஒரு பின்னணியில்தான் சர்வதேச விவகாரங்களில் அனுபவமுள்ள, தாராளவாத அரசியல் பின்புலத்தை கொண்டிருக்கும், சில முகங்கள் ஜனாதிபதிக்கு தேவைப்படுகின்றன.

இழுபறி நிலையில் இருந்த, இந்தியாவிற்கான தூதுவர் விவகாரம் தற்போது முடிவுக்கு வந்திருக்கின்றது. மிலிந்த மொறகொட இந்திய மற்றும் அமெரிக்க இராஜதந்திர சமூகத்திற்கு நன்கு பரிச்சயமான ஒருவர். இந்திய- இலங்கை உறவின் புதிய அத்தியாயம் ஒன்றை ஆரம்பிக்கும் நோக்கில் சில விடயங்களை முன்னெடுக்கவுள்ளாரென மொறகொட தெரிவித்திருக்கின்றார். மொறகொட தனது பணிகளை ஆரம்பித்திருக்கும் சமவேளையில் அமைச்சரவையில் மாற்றங்கள் இடம்பெறவுள்ளதான செய்திகள் வெளியாகியிருக்கின்றன. இந்த பின்னணியில்தான், சர்வதேச விவகாரங்களில் அனுபவமுள்ள, ஜீ. எல். பீரிஸ் போன்றவர்களுக்கு முக்கியத்துவம் அளிக்கப்படுகின்றது. இந்த பின்புலத்தில்தான் சில தினங்களுக்கு முன்னர், அமெரிக்க தூதுவர் முன்னிலையில், ஜீ. எல். பீரிஸ் - சுமந்திரன் சந்திப்பு இடம்பெற்றிருந்தது.

பொதுவாக இராஜதந்திர ஆடுகளத்தில் வாய்ப்புக்கள் அரசுகளுக்கே அதிகமாக இருக்கும். இது ஓர் உலக நடைமுறை. யுத்தம் முடிவுற்று 12 வருடங்கள் கடந்துவிட்ட நிலையிலும், தமிழர் விவகாரத்தில் எதிர்பார்த்தது போன்று சாதகமான விடயங்கள் இடம்பெறாமைக்கான காரணங்களை நாம் இந்த பின்புலத்தில்தான் புரிந்துகொள்ள வேண்டும். அரசாங்கம் புதியதோர் ஆட்டத்தை ஆடவுள்ளது எனபது வெள்ளிடைமலை. இதனை துல்லியமாக மதிப்பிட்டு, சூழ்நிலைகளை சரியாக கையாளுவது தொடர்பில் தமிழர் தலைமைகள் சிந்தித்து செயலாற்ற வேண்டும்.

## இந்தியாவின் 75ஆவது சுதந்திர தினம்:

# ஆங்கில மோகத்திலிருந்தும் விடுதலையடையாத இந்தியா!

-அலசுவது இராஜதந்திரி-

இந்தியாவின் 75ஆவது சுதந்திர தினம் மிகக்கோலாகலமான முறையில் புதுடில்லியிலுள்ள செங்கோட்டையில் இந்திய தேசிய கொடியேற்றப்பட்டு நேற்றைய தினம் கொண்டாடப்பட்டது.

இந்தியாவின் தேசபிதா மகாத்மா காந்தியடிகள் பிறந்த குஜராத் மாநிலத்தில் பிறந்த பிரதமர் நரேந்திர மோடி, புதுடில்லியிலுள்ள செங்கோட்டையில் இந்தியாவின் மூவர்ண கொடியை ஏற்றி சுதந்திர தின நிகழ்வுகளை ஆரம்பித்து வைத்து ஹிந்தி மொழியில் உரை நிகழ்த்தியிருந்தார். பிரதமர் நரேந்திர மோடி தலையில் கம்பீரமாக தலைப்பாகை அணிந்தவராக ஹிந்தி மொழியில் நாட்டு மக்களுக்கு உரையாற்றினார்.

ஆனால், இன்றைய சந்ததி இந்தியரின் நாளாந்த வாழ்க்கையில் அவர்களின் தாய் மொழிகள் எவ்வளவு தூரம் உயர்வான முறையில் செல்வாக்குச்செலுத்துகின்றன என்பதே பிரதான கேள்வியாக இருக்கின்றது.

இந்தியா 75-வருடங்களுக்கு முன்னர் பிரித்தானியரிடமிருந்து சுதந்திரம் பெற்றிருந்தது. ஆனால், ஆங்கில மோகத்திலிருந்து இந்தியா முற்று முழுதாக சுதந்திரம் பெற்றுள்ளதா? என்பதே முக்கிய கேள்வியாக இருக்கின்றது.

இந்தியா 28 மாநிலங்களையும், 8 யூனியன் பிரதேசங்களையும் உள்ளடக்கிய தேசமாகும். இந்தியா பல மொழிகளை உள்ளடக்கிய நாடாகும். இருந்தபோதிலும் இந்தியாவில் 22 மொழிகளே உத்தியோகபூர்வ மொழியாக அங்கீகரிக்கப்பட்டுள்ளன.

கத்தியின்றி , இரத்தமின்றி ஆங்கிலேயரிடமிருந்து மகாத்மா காந்தியடிகள் இந்தியாவுக்கு சுதந்திரம் பெற்றுத்தந்தார் என்று இந்தியர்கள் பெருமை கொள்ளலாம். ஆனால், இந்திய சுதந்திரம் என்பது பிரிட்டிஷாரின் 'யூனியன் ஜக்' தேசியக் கொடி கீழிறக்கப்பட்டதுடன் ஆங்கிலேயர்கள் இந்திய மண்ணிலிருந்து வெளியேறியதையுமே குறிப்பதாக இருக்கலாம். இருந்தபோதிலும் இந்திய மண்ணில் தமது தாய் மொழியான ஆங்கில மொழியை மிக ஆழமாக வேரூன்ற வைத்துவிட்டே இந்தியாவை விட்டு பிரிட்டிஷார் வெளியேறியுள்ளனர்.

### இந்தியாவில் ஆங்கில அறிவு

இதன்காரணமாக இங்கிலாந்தைவிட இந்தியாவிலேயே இன்று அதிகளவில் ஆங்கிலம் பேசப்படுவதை அறிய முடிகின்றது.

இந்திய மக்கள் தத்தமது தாய் மொழியை முன்னிறுத்தி அவற்றின் மேன்மைக்காக போராட்டங்களை இன்றுவரை நடத்தியே வருகின்றனர். ஆயினும் இந்தியாவின் 22 உத்தியோகபூர்வமொழிகளில் ஹிந்தி மொழியே ஆட்சிமொழியாக இருந்து வருகின்றது.

இருந்தபோதிலும் இந்தியாவை அதன் அரசியல், சமூக, பொருளாதார மற்றும் சர்வதேச விவகாரங்களில் நகர்த்திச்செல்லும் மொழியாக விளங்கி நிற்பது ஆங்கிலமே என்பது குறிப்பிடத்தக்கது. இந்தியர்களில் இன்றைய சந்ததியைச் சேர்ந்தவர்கள் ஆங்கில மொழி மூலமான வாழ்க்கை முறையை பின்பற்றுவதில் பெரிதும் ஆர்வங்காட்டி வருவதையும் இந்தியாவின் கல்வித்துறையில் ஆங்கிலம் மிக ஆழமாகவே வேரூன்றியுள்ளதையும் காணமுடிகின்றது.

இத்தகைய நிலைமைகுறித்து இந்தியர்களில் பெரும்பாலானவர்கள் தம்மவர்களின் தாய்மொழிகள் எதிர்காலத்தில் செம்மைப்படுத்தப்படாது புறக்கணிக்கப்பட்டுவிடுமோ என்று அஞ்சுவதையும் அவதானிக்க முடிகின்றது. இன்றைய சந்ததி இந்திய மாணவர்களின் ஆங்கிலஅறிவு இங்கிலாந்தின் இன்றைய சந்ததி ஆங்கிலேய மாணவர்களைக்கூட வியப்பிலாழ்த்துமளவுக்கு காணப்படுவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இன்றைய சந்ததி இந்தியர்கள் கொண்டிருக்கின்ற ஆங்கில அறிவு காரணமாக உலகின் எப்பாகத்திலும் அவர்கள் மிக சிறப்போடு கால்பதித்துள்ளதையும் அவதானிக்கக் கூடியதாக இருக்கின்றது.


### அமெரிக்க உப ஜனாதிபதி கமலா ஹறிஸ்

இதற்கு நல்ல உதாரணமாக இந்திய வம்வாவளியினரான அமெரிக்க உபஜனாதிபதி கமலா ஹறிஸின் வாழ்க்கைப் பின்னணியைக்கூட குறிப்பிடலாம். இதுதவிர, அமெரிக்காவிலும் பிரித்தானியா, அவுஸ்திரேலியா, கனடா, நியூஸிலாந்து போன்ற ஆங்கிலமொழி பேசுகின்ற நாடுகளிலும் தமது ஆங்கிலப் புலமையினால் இந்தியர்கள் அரசியல் , விஞ்ஞானம், பொருளாதாரம், கல்வி, கலாசாரம் என்பவற்றில் தமக்கென ஓர் உயர்வான இடத்தை வகித்து மேலோங்கியிருப்பதை அவதானிக்கமுடிகிறது.

இந்தியா தனது 75ஆவது சுதந்திரதினத்தை மிகப்பெருமிதமான முறையில் இவ்வருடம் கொண்டாடியிருந்தது. இந்தியா தனது பல்துறைசார்ந்த வளர்ச்சி குறித்து பெருமிதம் கொள்வதற்கு இந்திய மொழிகளைவிட ஆங்கில மொழியே ஒரு 'கொழு கொம்பாக' விளங்கியிருந்ததை காணமுடிகின்றது.

ஆங்கிலேயரை 75 வருடங்களுக்கு முன்னர் இந்திய மண்ணிலிருந்து கத்தியின்றி, இரத்தமின்றி வெளியேற்றியமையை இந்தியர்கள் நிச்சயம் பெருமிதமாகக் கருதலாம். ஆனால், இன்றைய சந்ததி இந்தியர்களின் நடை, உடை, பாவனை கல்வி முறை என்பவற்றில் ஆங்கில மொழி மோகம் ஆழவேரூன்றி இந்தியா முழு அளவில் ஆங்கிலமொழிச் செல்வாக்கிலிருந்து விடுபட்டிராத நிலையிலிருப்பதையே அவதானிக்க முடிகின்றது.

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'



**ஒகஸ்ட் - 16 திங்கட்கிழமை**
**பிலவ வருடம் - ஆடி 31**
**நல்ல நேரம் : 6.00 - 7.30**
**ராகு காலம் : 7.30 - 9.00**
**திதி : நவமி**



## இன்றைய ராசிபலன்

**16.08.2021**

**மேடம்**
ஒவ்வொரு விஷயத்திலும் கவனமாக இருப்பது அவசியம். வெளிநாட்டுத் தொடர்பு சந்தோஷத்தை அளிக்கும். நல்ல மனிதர்களின் உதவி கிடைக்கும். சுப நிகழ்ச்சிகள் நடக்கும்.

**இடபம்**
புதிய நட்பால் உற்சாகமடைவீர்கள். மனமகிழ்ச்சி உண்டு. நண்பர்களுக்கு இடையே இருந்த பிரச்னை தீர்ந்து ஒற்றுமை மீளும். நல்ல விஷயம் நடப்பதால் குடும்ப மகிழ்ச்சி அதிகரிக்கும்.

**மிதுனம்**
எதிர்பார்த்த தொகை வரும். புண்ணியச் செயல் செய்வீர்கள். உழைப்பு கூடும் வியாபாரத்தில் இலாபம் சற்றே உயரும். பணியில் இருந்த சிக்கல் தீரும். புத்துணர்ச்சி பெருகும் நாள்.

**கடகம்**
காலையில் வரும் செய்தி மகிழ்ச்சி தரும். பரபரப்பான நாள். அமைதி கூடும் நாள். பணியிடத்தில் நன்மை உண்டு. சண்டை போட்டவர் உங்கள் முயற்சிக்கு ஒத்துழைப்பு செய்வார்.

**சிம்மம்**
மேலதிகாரிகளிடம் கோபம் காட்ட வேண்டாம். திருப்திகரமான நாள். வேலைச்சுமை சற்றுக் குறையும். பொது வாழ்வில் உங்கள் பேச்சிற்கு மதிப்பளிப்பார்கள்.

**கன்னி**
உங்கள் நிலையில் உயர்வு கிடைக்கும் நாள். ஆரோக்யம் மீளும். கடினமான விஷயங்களை யும் எளிதாக முடித்து மகிழ்வீர்கள். உங்களுக்குக் கீழ் வேலை பார்ப்பவரின் நிலையை உயர்த்துவீர்கள்.

**துலாம்**
உங்களால் பிறர் பயன் அடைவர். மகிழ்ச்சி அதிகரிக்கும். பணவரவு உண்டு. பழைய நண்பர் ஒருவர் தேடி வருவார். நண்பர் ஒருவருக்கு உங்களால் உயர்வு வரும்.

**விருட்சிகம்**
புதிய விஷயம் கற்று குடும்பத்தினரை அசத்துவீர்கள். உயரதிகாரி அதிசயிக்கும் படி நடந்து கொள்வீர்கள். சக ஊழியர்களுக்கு உதவுவீர்கள். உங்களின் திறமை வெளிப்படும்.

**தனுசு**
சுற்றி இருப்பவர்களை புரிந்து கொள்ளும் வாய்ப்பு வரும். பொறுமையின்றி பொங்கி எழுந்து வாய்ப்பை நழுவ விடாதீர்கள். யாரோடும் வன்மம் வேண்டாம். தன்னம்பிக்கையை கூட்டுங்கள்.

**மகரம்**
வெறுத்து ஒதுக்கிய நண்பர்கள் வந்து உதவி கேட்பார்கள். முயற்சி வெற்றிபெற கடுமையாக உழைக்க வேண்டும். வியாபாரத்தில் ஈடுபாடு அதிகரிக்கும். திடீர் யோகம் கிட்டும்.

**கும்பம்**
அக்கம் பக்கத்தினரின் ஆதரவு உண்டு. பெரியோரின் ஆசி கிடைக்கும். உண்மையும், உழைப்பும் குறையாமல் இருந்தால் வெல்வீர்கள். இளைஞர்கள் நெளிவு, சுளிவுகளை கற்றுக் கொள்வீர்கள்.

**மீனம்**
எந்தச் சூழலிலும் உங்கள் கை ஓங்கும். நட்பால் ஆதாயம் உண்டு. வழக்கமான சுறுசுறுப்பு குறையாமல் பார்த்துக் கொள்ளுங்கள். திட்டமிட்ட விஷயங்கள் பெரும்பாலும் தடையின்றி முடியும்.

# கோட்டையில் முதன் முறையாக தேசிய கொடி ஏற்றிய ஸ்டாலின்

சென்னை, ஒக. 16

தி.மு.க. ஆட்சிப்பொறுப்புக்கு வந்த பின்னர் முதல் முறையாக நேற்றுகாலைசென்னைகோட்டை கொத்தளத்தில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தேசிய கொடியை ஏற்றி வைத்தார். அதன் பின்னர் உரையாற்றிய முதல்வர் மு.க.ஸ்டாலின் தியாகிகளின் குடும்பங்களுக்கான ஓய்வூதியம் ரூ.18,000 ஆக உயர்த்தப்படும் என அறிவித்துள்ளார்.

இந்தியாவின் 75ஆவது சுதந்திரதினம் நேற்று கொண்டாடப்பட்டது. தமிழக சட்டப்பேரவைத் தேர்தலில் வெற்றிபெற்று முதல்வராகப் பொறுப்பேற்றுள்ள மு.க.ஸ்டாலின் சென்னையில் அமைந்துள்ள புனித ஜோர்ஜ் கோட்டையில் காலை 9.00 மணிக்கு முதல்முறையாக தேசியக் கொடியேற்றி வைத்து, சுதந்திர தின உரையாற்றினார்.

அப்போது பேசிய அவர், ”நாட்டின் சுதந்திர தினத்தன்று இந்தியா முழுவதும் உள்ள முதலமைச்சர்கள் கொடியேற்றும் வாய்ப்பை, உரிமையை பெற்றுத் தந்தவர்



கலைஞர். 75ஆவது சுதந்திரதினத்தை நினைவு கூறும் வகையில் தமிழக அரசால் மிகப்பெரிய நினைவுத் தூண் உருவாக்கப்பட்டுள்ளது. விடுதலைப் போராட்ட தியாகிகளுக்கு வழங்கப்படும் ஓய்வூதியத் தொகை ரூபாய் 17 ஆயிரத்திலிருந்து 18 ஆயிரமாகவும், குடும்ப ஓய்வூதியத் தொகை 8,500 லிருந்து 9 ஆயிரமாக உயர்த்தி வழங்கப்படும்” எனத் தெரிவித்தார்.

# சங்கரய்யாவுக்கு ‘தகைசால் தமிழர்’ விருது; வீடு தேடி சென்று கொடுத்த முதல்வர்!

சென்னை, ஒக 16

மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் மூத்த தலைவர் சங்கரய்யாவுக்கு ‘தகைசால்தமிழர்’ விருதை தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் இந்திய சுதந்திர தினமான நேற்று நேரில் சென்று வழங்கினார்.

தமிழகத்துக்கும், தமிழின வளர்ச்சிக்கும் மாபெரும் பங்காற்றியவர்களைப் பெருமைப்படுத்தும் வகையில் ‘தகைசால் தமிழர்’ என்ற பெயரில் புதிய விருதை உருவாக்கி, வழங்க முதல்வர் ஸ்டாலின் உத்தரவிட்டார்.

இந்த விருது ஒவ்வோர் ஆண்டும் சுதந்திர தினத்தன்று வழங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டது.

இந்த விருதை பெறும் முதல் தமிழ் ஆளுமையாக, நீண்ட கால அரசியல்வாதியும், சுதந்திர போராட்ட தியாகியும், மூத்த கம்யூனிஸ்ட் கட்சியின் தலை



வரான என்.சங்கரய்யா தேர்வு செய்யப்பட்டார்.

வயது மூப்பின் காரணமாக சங்கரய்யா கடந்த இரண்டு ஆண்டுகளுக்கும் மேலாக வீட்டிலேயே இருக்கிறார். அதனால், சென்னை குரோம்பேட்டையில் உள்ள அவரது இல்லத்திற்கு சென்ற ஸ்டாலின், சங்கரய்யாவுக்கு ‘தகைசால் தமிழர்’ விருதை நேரில் வழங்கினார். ‘தகைசால் தமிழர்’ விருதுடன் ரூபாய் 10 லட்சத்துக்கான காசோலையும், பாராட்டுச்சான்றிதழும் வழங்கப்பட்டது.

தமிழ்நாடு முதல்வருக்கு நன்றி தெரிவித்த என். சங்கரய்யா ஏற்கனவே சொன்னதுபோல், தமிழ்நாடு முதல்வரின் கொரோனா நிவாரண நிதிக்கு தனக்கு அளிக்கப்பட்ட ரூ.10 இலட்சத்தை வழங்கினார்.

# ஊரக தேர்தல்களுக்கு தயாராகும் ம.தி.மு.க; மாவட்ட செயலாளர்களுடன் ஆலோசனை

சென்னை, ஒக. 16

ம.தி.மு.கவின் மாவட்டச் செய லாளர்கள் கூட்டம் நேற்று அக்கட்சியின் தலைமை அலுவலகமான சென்னை எழும்பூரில்இருக்கும் தாயகத்தில் நடைபெற்றது. அவைத்தலைவர் திருப்பூர் சு. துரைசாமி தலைமையில், உயர்நிலைக்குழு, மாவட்டச் செயலாளர்கள், ஆட்சிமன்றக் குழு, அரசியல் ஆலோசனைக்குழு, அரசியல் ஆய்வு மைய உறுப்பினர்கள், தலைமைக் கழகச் செயலாளர்கள் கூட்டம் என்ற வகையில் இக்கூட்டம் நடைபெற்றது.

9 மாவட்ட ஊரக உள்ளாட்சித் தேர்தல் நெருங்குவதை ஒட்டியும், நீண்ட நாட்களாக மாவட்ட செயலாளர்களின் கூட்டம் நடத்தாததாலும் இக்




கூட்டத்துக்கு அழைப்பு விடுத்திருந்தார் அக்கட்சியின் பொதுச் செயலாளர் வைகோ.

பேசிய வைகோ, “உள்ளாட்சித் தேர்தலில் நாம் வெற்றிபெறக் கூடிய இடங்களை ஆராய்ந்து தேர்ந்தெடுத்து தி.மு.கவின் மாவட்டச் செயலாளர்களோடு பேசிக் கொள்ளுங்கள். ஊரக உள்ளாட்சித் தேர்தலை பொறுத்த மட்டில் மாவட்டச் செயலாளர்கள் அளவிலேயே பேசி முடிவு செய்துகொள்ளுங்கள். ரொம்ப சிக்கலாக இருந்தால் மட்டுமே தி.மு.க. தலைமையிடம் பேசுவோம்” என்று தெரிவித்தார்.

# அரசியல் காழ்ப்புணர்வுகளை தாண்டி தொற்றிலிருந்து மீள ஒன்றுபடுவோம்!

## விக்னேஸ்வரன் எம். பி. அழைப்பு

யாழ்ப்பாணம், ஓக. 16

**“அரசியல் காழ்புணர்வுகளைத் தாண்டி கொரோனா எனும் பேரிடரிலிருந்து நாட்டையும், உயிர்களையும் பாதுகாத்து, வீழ்ந்து போகும் பொருளாதார நிலையிலிருந்தும் மீண்டெழுவதற்கு ஒன்றுபட்டு நிற்போம்”, என்று தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான க. வி. விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார்.**

கொரோனா நிலவரம் தொடர்பில் விழிப்புணர்வு அறிக்கை ஒன்றை நேற்று வெளியிட்டிருந்தார். இதிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டவையாவன்

“தற்போது மிகவும் ஆபத்தான நிலை இலங்கையில் ஏற்பட்டுள்ளது. தினசரி 100 - 150 வரை உயிரிழப்புகள் ஏற்படுகின்றன. எனவே, இலங்கையிலுள்ள சகல மொழிபேசும், சகல மதம் சார்ந்த எல்லோரும் கொரோனாவின் கோரப்பிடிக்குள் சிக்கியுள்ளதை நாம் உணர்ந்து கொள்ள வேண்டும்.

“சுனாமியின்போது போரில் ஈடுபட்டிருந்த அரச படைகளும் விடுதலைப் புலிகளும் சில நாள்கள் தமது பகைமையை மறந்து ஒன்று சேர்ந்து மக்களுக்கு உதவி புரிந்ததை இத்தருணத்தில் நினைவுபடுத்த விரும்புகின்றேன். ஆகவே, அரசியல் வேறுபாடுகள் தாண்டி, கொரோனாவிலிருந்து நாட்டை எப்படி மீட்கலாமென நாம் அனைவரும் ஒன்றுபட்டுச் சிந்திக்க வேண்டும். சுகாதாரத் துறையினரின் அறிவுரைப்படி தனிநபர் சுகாதாரம் பேணப்படல் அவசியம்.

“தொழிலுக்குச் செல்வோர் தவிர மற்றவர்கள் வீடுகளிலேயே தங்கியிருத்தல் நன்மை தரும். ஏதேனும், தேவைகளுக்காக வெளியில் செல்லும் போது தவறாது முகக்கவசம் அணிதலும், தனிநபர் சமூக இடைவெளிகளைப் பேணலும் அவசியம். குறிப்பாக தற்போதைய இக்கட்டான காலத்தில் இரண்டு முகக்கவசங்களை அணிவது சிறப்பானது. காரணம் வீரியமிக்க டெல்டா வகைக் கொரோனா வைரஸின் பரவல் இலங்கையில் அதிகரித்துள்ளது.

“அனைவரும் தேவையற்ற வகையில் ஒன்று கூடும், ஒன்று திரளும் நிகழ்வுகளைத் தவிர்த்தல் வேண்டும். பெரிய நிகழ்வுகளெனின் ஒருசில மாதங்களுக்காகவாயினும் ஒத்தி வைத்து நடத்துதல் சிறப்பு. இரண்டு நாள்களுக்கு மேல் காய்ச்சல், சளி, இருமல், தொண்டை நோ போன்ற சந்தேகத்துக்கிடமான அறிகுறிகள் இருப்பின், சுகாதாரத் துறையினரின் அறிவுறுத்தல்படி உடனடியாக அருகிலுள்ள வைத்தியசாலை அல்லது சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையைத் தொடர்புகொள்ளல் வேண்டும்.

“மிக முக்கியமான விடயம் என்னவென்றால் அனைவரும் தவறாது தடுப்பூசிகளைப் பெற்றுக்கொள்ள வேண்டும். தடுப்பூசியின் பெயரென்ன? எந்த நாட்டில் உற்பத்தி செய்யப்பட்டது? இந்தத் தடுப்பூசியைப் போட்டால் உயிரிழப்பு ஏற்படுமா? அமெரிக்காவின் “பைசர்“ தடுப்பூசி வரும்வரை காத்திருப்போம் என்றெல்லாம் பாராது அந்தந்தப் பகுதிகளில் எந்தத் தடுப்பூசி வழங்கப்படுகின்றதோ அதனை 30 வயதுக்கு மேற்பட்ட அனைவரும் இரு தடவைகள் தவறாது பெறுதல் வேண்டும்.

“இஸ்ரேல். பிரித்தானியா, அவுஸ்திரேலியா போன்ற நாடுகள் அனைவரும் தடுப்பூசி ஏற்றிக் கொள்ள வேண்டும் என்ற இறுக்கமான நடைமுறையைப் பேணி இன்று கொரோனாவின் மோசமான தாக்கத்திலிருந்து விடுபட்டுள்ளதால் நாமும் சுகாதாரத்துறையின் அறிவுரைப்படி அனைவரும் தடுப்பூசியைப் பெற்றுக் கொள்வோம். அரசியல் காழ்புணர்வுகளைத் தாண்டி கொரோனா எனும் பேரிடரிலிருந்து நாட்டையும், உயிர்களையும் பாதுகாத்து, வீழ்ந்து போகும் பொருளாதார நிலையிலிருந்தும் மீண்டெழுவதற்கு ஒன்றுபட்டு நிற்போமாக!

“அதேவேளை, தமிழ் மக்களின் உரிமைகள் உடைமைகள் பறிபோகாமல், நிரந்தர அரசியல் தீர்வைப் பெறுதல் என்ற விடயங்களிலும் உறுதியுடன் செயல்படுவோமாக!”, என்றுள்ளது. (ஐ)

# நாய் கடித்ததால் குடும்பஸ்தர் பலி

வடமராட்சி, ஓக. 16

நாய் கடித்ததாகத் தெரிவித்து பருத்தித்துறை ஆதார மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட இளம் குடும்பஸ்தர் சிகிச்சை பலனின்றி நேற்று உயிரிழந்தார்.

வடமராட்சி கிழக்கு - நாகர் கோவில் கிழக்கை சேர்ந்த ஜீவரத்தினம் திருச்செல்வா (வயது -29) என்பவரே இவ்வாறு உயிரிழந்தவராவார்.

இவருக்கு சில தினங்களுக்கு முன்னர் விசர் நாய் கடித்ததாகக் கூறப்படுகின்றது. இந்நிலையில், அவருக்கு நேற்று முன்தினம் சனிக்கிழமை இரவு வலிப்பு ஏற்பட்டது. இதையடுத்து அவர் உடனடியாக பருத்தித்துறை மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார்.

ஆனால், சிகிச்சை பலனின்றி நேற்று ஞாயிற்றுக்கிழமை காலை அவர் உயிரிழந்தார்.

இதேவேளை, உயிரிழந்தவரின் மாதிரிகள் பெறப்பட்டு பி. சி. ஆர். சோதனைக்கு அனுப்பப்பட்டுள்ளதாக மருத்துவமனை வட்டாரங்கள் தெரிவித்தன. (ஐ-02)

# உரும்பிராயில் வன்முறை குழு தாக்குதல்

யாழ்ப்பாணம், ஓக. 16

வீட்டின் முன்புறத்தில் நின்ற மோட்டார் சைக்கிள் மீது வன்முறை குழுவால் பெற்றோல் குண்டுவீசி தாக்கி விட்டு தப்பிச் சென்றுள்ளது.

இந்த சம்பவம் நேற்றுமுன் தினம் சனிக்கிழமை இரவு உரும்பிராயில் இடம்பெற்றுள்ளது.

இதன்போது மோட்டார் சைக்கிளின் பெரும்பகுதி தீயில் எரிந்து நாசமானது. இந்தச் சம்பவம் தொடர்பில் கோப்பாய் பொலிஸில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டது. பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

# வடக்கில் 532,155 பேருக்கு தடுப்பூசி!



யாழ்ப்பாணம், ஓக. 16

வட மாகாணத்தில் 30 வயதுக்கு மேற்பட்டவர்களில் 5 இலட்சத்து 32 ஆயிரத்து 155 பேர் கோவிட் - 19 தடுப்பூசி பெற்றுக்கொண்டனர். இது 30 வயதுக்கு மேற்பட்ட மக்கள் தொகையில் 80.93 வீதமாகும் என்று வட மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் ஆ.கேதீஸ்வரன் தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் சனிக்கிழமை இரவு வரையான தரவின் பிரகாரமே இந்த விடயத்தை அவர் தெரிவித்தார்.

இதில், ஒரு இலட்சத்து 59 ஆயிரத்து 81 பேர் இதுவரை இரண்டு தடுப்பூசிகளையும் பெற்றுள்ளனர். மாகாணத்தின் 30 வயதுக்கு மேற்பட்ட மக்கள் தொகையில்இது 23.19 வீதமாகும்.

யாழ்ப்பாணத்தில், 2 இலட்சத்து 78 ஆயிரத்து 456 பேரும், கிளிநொச்சியில் 58 ஆயிரத்து 734 பேரும், மன்னாரில் 59 ஆயிரத்து 14 பேரும், முல்லைத்தீவில் 53 ஆயிரத்து 513 பேரும், வவுனியாவில் 82 ஆயிரத்து 418 பேரும் தடுப்பூசிகளை பெற்றுள்ளனர். (ஐ)

# ஆனையிறவில் நேற்று குடை சாய்ந்தது டிப்பர்!

## காயங்களுடன் தப்பினார் சாரதி

கிளிநொச்சி, ஓக. 16

கெப் ரக வாகனத்தை மோதிய டிப்பர் குடை சாய்ந்து விபத்துக்குள்ளானது. இதன்போது, சாரதி காயங்களுடன் உயிர்தப்பினார். இந்த விபத்து நேற்று காலை ஆனையிறவு பகுதியில் இடம்பெற்றது.

யாழ்ப்பாணம் நோக்கிப் பய ணித்த கெப் ரக வாகனத்தை கிளிநொச்சி நோக்கி பயணித்த டிப்பர் வாகனம் மோதியது. வேகத்தால் தடுமாறிய டிப்பர் வாகனம் வீதியை விட்டு குடை சாய்ந்தது. டிப்பர் சாரதி காயங்களுடன் தெய்வாதீனமாக உயிர் தப்பினார்.

இந்த விபத்துக் குறித்து பளை பொலிஸார் விசாரணைகளை நடத்தி வருகின்றனர். (ஐ)



## மாநகர சீருடை விவகாரம்:

# விசாரணையால் பாதிக்கப்பட்டோர் அமைச்சர் டக்ளஸை சந்தித்தனர்!

யாழ்ப்பாணம், ஓக. 16

விடுதலை புலிகளின் காவல் துறையை ஒத்த சீருடையை அணிந்த விவகாரத்தில் பொலிஸ், புலனாய்வு விசாரணைகளால் பாதிக்கப்பட்ட இளைஞர்கள் ஐவரும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவை சந்தித்துள்ளனர். படைத் தரப்புகளின் இந்த அச்சுறுத்தலில் இருந்து விடுபட உதவுமாறு அவர்கள் இதன்போது கோரிக்கை விடுத்தனர்.

இந்த சந்திப்பு கடந்த வியாழக்கிழமை ஈ.பி.டி.பி. கட்சியின் அலுவலகத்தில் இடம்பெற்றதாக அந்தக் கட்சியின் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

யாழ். மாநகர சபை முதல்வராக மணிவண்ணன் தெரிவானமையை தொடர்ந்து, வரி, தண்டம் விதிப்புகளுக்காக ஐவர் கொண்ட ஓர் அணி உருவாக்கப்பட்டது. அந்த அணிக்கு கருநீல, இளநீல நிற சீருடை வழங்கப்பட்டது. இது விடுதலைப் புலிகளின் காவல் துறையின் சீருடையை ஒத்துள்ளது என்றுகூறி பெரும் சர்ச்சை எழுந்தது.

இதையடுத்து, அந்த ஆடையை அணிந்த இளைஞர்கள் பொலிஸ், புலனாய்வு பிரிவினரால் தொடர்ச்சியாக விசாரணைகள், அச்சுறுத்தல்களை எதிர்கொண்டுவந்தனர். இந்த நிலையிலேயே, “அச்ச மற்ற எதிர்காலத்தை பெற்று தாருங்கள்”, என்று கூறி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவை அவர்கள் சந்தித்துள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது.

“இவ்வாறான செயல்பாடுகளின் போது, கடந்த கால அனுபவங்களையும் தற்போதைய சூழலையும் நிதானமாக ஆராய்ந்து செயல்பட வேண்டும். கண்கெட்ட பின்னர் சூரிய நமஸ்காரம் செய்வதால் பலன் இல்லை என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும். எவ்வாறாயினும், சம்பந்தப்பட்ட தரப்பினருடன் இதுதொடர்பாக கலந்துரையாடி பாதிக்கப்பட்டவர்களுக்கு கௌரவமான எதிர்காலம் உறுதிப்படுத்தப்படும்”, என்று அமைச்சர் இளைஞர்களுக்கு கூறினார் என்றும் கூறப்பட்டது. (ஐ-3)









# மடுமாதாவின் ஆவணி திருவிழா நெறிமுறைப்படி இடம்பெற்றது!

மன்னார், ஓக. 16

மன்னார் மடு அன்னையின் வருடாந்த ஆவணித் திருவிழா திருப்பலி நேற்று ஞாயிற்றுக் கிழமை காலை 6.15 மணிக்கு கூட்டுத் திருப்பலியாக ஒப்புக் கொடுக்கப்பட்டது.

திருவிழா திருப்பலியை மன்னார் மறைமாவட்ட ஆயர் இம்மானுவேல் பெர்னாண்டோ ஆண்டகை தலைமையில் சிலாபம் மறைமாவட்ட ஆயர் அருட்கலாநிதி வலன்ஸ் மென்டிஸ் ஆண்டகை மற்றும் குருக்கள் இணைந்து கூட்டுத்திருப்பலியாக ஒப்புக்கொடுத்தனர்.

மடு அன்னையின் ஆவணி மாத திருவிழாவை கொண்டாடும் வகையில் கடந்த 6 ஆம் திகதி கொடியேற்றம் இடம்பெற்றது. மடுத்திருத்தலத்தின் பரிபாலகர் அருட்தந்தை எஸ்.ஜே.பெப்பி சோசை அடிகளார் தலைமையில் கொடியேற்றம் செய்யப்பட்டது. தொடர்ந்து நவநாள் திருப் பலிகள் ஒப்புக்கொடுக்கப்பட்டன.

மாலையிலே திருச்செபமாலை, மறையுரைகள், நற்கருணை ஆசிர் என்பன இடம்பெற்றது. நேற்றுமுன்தினம் சனிக்கிழமை மாலை 6 மணிக்கு வெஸ்பர் ஆராதனை இடம்பெற்று நற்கருணை ஆசிர்வாதம் வழங்கப்பட்டது.

நேற்று ஞாயிற்றுக்கிழமை காலை 6.15 மணிக்கு ஆயர்கள் குருக்கள் இணைந்து திருவிழா திருப்பலியை கூட்டுத்திருப்பலியாக ஒப்புக்கொடுத்தனர். தொடர்ந்து திருச்சொரூப பவனி இடம் பெற்றதோடு, மடு அன்னையின் ஆசி வழங்கப்பட்டது.

மட்டுப்படுத்தப்பட்ட பக்தர்களுடன், சுகாதார நெறிமுறைகளை பின்பற்றி அன்னையின் ஆவணித் திருவிழா சிறப்பாக இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

# சுமந்திரனை கட்டுப்படுத்தாதுவிடின் மாவை ராஜிநாமா செய்யவேண்டும்!

## காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் வலியுறுத்து

வவுனியா, ஓக. 16

“தமிழர்களின் அரசியல் எதிர்காலம் தொடர்பாக சுமந்திரன் யாருடனும் பேசுவதை, மாவை கட்டுப்படுத்த வேண்டும். இல்லாவிடில் மாவை ராஜினாமா செய்ய வேண்டும்” என்று வவுனியாவில் தொடர் போராட்டம் நடத்தும் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் தெரிவித்தனர்.

நேற்றைய தினம் செஞ்சோலையில் விமான குண்டு வீச்சில் கொல்லப்பட்ட சிறுவர்களின் 15ஆவது ஆண்டு நினைவு தினத்தை போராட்டக்காரர்கள் நடத்தினர்.

இதன்போது, கருத்துத் தெரிவித்தபோதே அவர்கள் மேற்கண்டவாறு கூறினர். இதன்போது அவர்கள் மேலும் தெரிவித்தவையாவன,

“எதிர்காலத்தில் இந்த படுகொலைகளை எப்படி நிறுத்துவது என்பதுதான் இன்று நமது முக்கிய செய்தி. எங்கள் அரசியல் தலைவர்கள் சிங்களவர்கள் தட்டில் வைக்கும் சலுகைகளுக்காக வேலை செய்வதை விட்டு, தமிழர்களை சரியாக வழிநடத்த வேண்டும்.

செப்ரெம்பரில் ஜெனிவா கூட்டத்தை முன்னிட்டு, சுமந்திரன் இலங்கையில் சிங்கள புத்திஜீவிகளை சந்திக்க தனியாக செல்கிறார் என்று கேட்பது மிகவும் அபாயமானது. கட்சி அனுமதி இல்லாமல் அவரால் தனியாக செயல்பட முடியாது. இங்கே எதையும் மறைக்க இராஜதந்திரம் தேவையில்லை. எல்லாவற்றுக்கும் மேலாக, கடந்த 74 வருட அனுபவத்தில் சிங்களத்துடன் பேசுவது பயனற்றது என்பது வரலாறு .

காணாமல் ஆக்கப்பட்ட தமிழ் தாய்மார்களான நாங்கள் சுமந்திரனை நம்பவில்லை. 2017 பெப்ரவரி 09 இல், பாதுகாப்பு அமைச்சர் ருவான் விஜயவர்த்தன எங்களை அழைத்தார். சுமந்திரன் எங்கள் சந்திப்புக்கு வந்து பாதுகாப்பு அமைச்சருடனான எங்கள் சந்திப்பை குழப்பிவிட்டார். இதுவே சுமந்திரனின் இயல்பாகும். சுமந்திரன் தமிழர்களை விரும்பாத நபர். தமிழர்களிடையே வாழ்வது தனக்கு அவமானம் என்று சொன்னவர்.

சுமந்திரன் தமிழர் தாயகத்தில் சிங்களவர் வாழ வேண்டும் என்று விரும்புபவர், அதை நிரூபிக்க அவர் நல்லாட்சி என்று அழைக்கப்பட்ட காலத்தில் வவுனியா, நெடுங்கேணியில் சிங்கள குடும்பத்திற்கு 4 ஆயிரம் காணி உறுதிப்பத்திரங்களை மைத்திரியுடன் சேர்ந்து வழங்கினார். சர்வதேச விசாரணை முடிந்துவிட்டது என்று சொன்னவர், இப்போது தமிழர்களுக்கு உள்நாட்டு தீர்ப்பை வழங்க வேண்டும் என்கிறார்.

தமிழர்களின் அரசியல் எதிர்காலம் தொடர்பாக சுமந்திரன் யாருடனும் பேசுவதை மாவை சேனாதிராசா கட்டுப்படுத்த வேண்டும். இல்லாது அனுமதித்தால். நாங்கள் அவர் ராஜிநாமா செய்ய வேண்டும் என்று வலியுறுத்துகிறோம் - என்றனர். (ஐ)



# யாழ்ப்பாணம் துணை தூதரகத்தில் இந்திய சுதந்திரதின கொண்டாட்டம்

யாழ்ப்பாணம், ஓக. 16

இந்தியாவின் 75 வது சுதந்திர தினமான நேற்று “ஆசாதிகா அம்ரித் மஹோத்ஸவ்” எனும் சிறப்பு நிகழ்வு யாழ்ப்பாணத்தில் உள்ள இந்திய துணைத் தூதரகத்தில் இடம்பெற்றது.

யாழ்ப்பாணத்திற்கான இந்தியத் துணைத் தூதுவர் ராகேஷ் நட்ராஜ் ஜெயபாஸ்கரன், யாழ்ப்பாண படைகளின் கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் ஜகத் கொடித்துவக்கு ஆகியோர் இந்திய அமைதி படையினர் நினைவாக பலாலியில் அமைக்கப்பட்ட நினைவுத் தூபியில் அஞ்சலி செலுத்தினர்.

தொடர்ந்து, யாழ். இந்தியத் துணைத் தூதரகத்தில் துணைத் தூதுவர் இந்தியாவின் தேசிய கொடியை ஏற்றினார்.

இந்திய சுதந்திர தினத்தை ஒட்டி யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள இந்தியத் துணைத் தூதரக கட்டடம் மற்றும் யாழ்ப்பாணம் இந்திய கலாசார மைய கட்டடம் என்பன இந்திய தேசியக் கொடியின் மூவர்ண மின் விளக்குகளால் ஒளிர்ந்தன என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஐ)

# வவுனியா பொது மருத்துவமனைக்கு ரூ.5 கோடி மருத்துவ உபகரணங்கள்

வவுனியா, ஓக. 16

அதிவேகமாக பரவி வரும் கொரோனா தொற்றை எதிர்கொள்ளும் வகையில் 5 கோடி ரூபாய் பெறுமதியான மருத்துவ உபகரணங்கள் வவுனியா பொது மருத்துவமனைக்கு மத்திய சுகாதார அமைச்சால் வழங்கப்பட்டன.

மருத்துவமனையின் பணிப்பாளரின் வேண்டுகோளுக்கு அமையவே இந்த உபகரணங்கள் வழங்கப்பட்டன.

தீவிர கொரோனா நோயாளிகளுக்கு தேவையான உயரோட்ட நாசி ஒட்சிசன் கருவிகள், நோயாளர் கண்காணிப்பு கருவி மற்றும் செயற்கை சுவாச கருவிகள் உட்பட பல கருவிகளும், உபகரணங்களும் கிடைத்தமை தற்போதைய கடும் கொரோனா தொற்று நோயாளிகளுக்கான சேவைகளை வழங்க அத்தியாவசியமானதென மருத்துவ நிபுணர்கள் தெரிவித்தனர்.

சுற்றுநிருபங்களுக்கமைய கொரோனா நோயாளிகள் மற்றும் கொரோனா அல்லாத மற்றைய நோயாளிகளுக்கான சேவை வழங்கல் சீரான முறையில் வவுனியா மாவட்ட பொது வைத்தியசாலையில் திட்டமிடப்பட்டுள்ள போதும், சுகாதார ஊழியர்களது வேலைப்பளு பல மடங்காக அதிகரித்துள்ளதாக பணிப்பாளர் தெரிவித்தார். (ஐ)

# கிழக்கை நெருங்குகிறது பேராபத்து!

## சுகாதார சேவைகள் பணிப்பாளர் எச்சரிக்கை

- **447 பேர் தொற்றால் உயிரிழந்தனர்**
- **27,201 தொற்றாளராக அடையாளம்**
- **டெல்டா திரிபும் பரவ ஆரம்பித்தது**
- **அதி ஆபத்தில் அம்பாறை மாவட்டம்**



மட்டக்களப்பு, ஓக. 16

**கிழக்கு மாகாணத்தில டெல்டா திரிபின் தாக்கமும் இனங்காணப்பட்டுள்ளது. இது மற்றொரு பேராபத்து நிலைக்கு கட்டியம் கூறி நிற்கிறது. நேற்று முன்தினம் இரவு வரை தொற்றால் 447 பேர் உயிரிழந்தனர். மூன்றாம் அலையில் மட்டும் 421 மரணங்கள் சம்பவித்துள்ளன என்று கிழக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் ஏ.ஆர்.எம். தௌபீக் தெரிவித்தார்.**

மேலும், "இதேவேளை, மாகாணத்தில் கொரோனா தொற்றாளர்களின் எண்ணிக்கை 27 ஆயிரத்து 201ஆக உயர்ந்துள்ளன. அத்துடன், வழமைக்கு மாறாக கடந்த நேற்று காலை வரையான 24 மணி நேரத்தில் 618தொற்றுகளும், 7 மரணங்களும் ஏற்பட்டுள்ளன. டெல்டா திரிபின் தாக்கமும் இனங்காணப்பட்டுள்ளது. இது மற்றொரு பேராபத்து நிலைக்கு கட்டியம் கூறி நிற்கிறது.

618 தொற்றாளர்களில் அம்பாறை மருத்துவ அதிகாரி பிரிவில் மட்டும் 317 பேரும், கல்முனை சுகாதார அதிகாரி பிரிவில் 79 பேரும், திருகோணமலை மாவட்டத்தில் 7 தொற்றாளர்களும், மட்டக்ளப்பில் 215 தொற்றாளர்களும் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

அண்மைக் காலமாக அம்பாறை மாவட்டத்திலேயே 200ஐ கடந்த தொற்றுகள் அடையாளம் காணப்படுகின்றன. அம்பாறைப்பிராந்தியத்தில் அதிகூடிய 102 தொற்றுக்கள் தெஹியத்தகண்டியவிலும் ,57 தொற்றுக்கள் உகணை பிரதேசத்திலும் 56அம்பாறை நகரப்பிரதேசத்திலும் ஏற்பட்டுள்ள அதே சமயம் கல்முனைப்பிராந்தியத்தில் அதிகூடிய 181 தொற்றுக்கள் பதிவாகியுள்ளன.

இதுவரை அம்பாறை பிராந்தியத்தில் 3 டெல்டா நோயாளிகள் அடையாளம் காணப்பட்டுள்ளனர். அவர்கள் சிகிச்சையில் நலமாகவே தற்சமயம் உள்ளனர் .

கிழக்கு மாகாணத்துக்கு கிடைத்த 9 இலட்சம் தடுப் பூசிகளில் இதுவரை 8 இலட் சத்து 51ஆயிரத்து 664தடுப்பூசிகள் ஏற்றப்பட்டுவிட்டன. அதாவது 80வீதமானோருக்கு முதலாவது டோஸ் ஏற்றப்பட்டுவிட்டது - என்றார்.



## கொரோனாவால் மரணமடைந்தோரின் 39 சடலங்கள் ஓட்டமாவடியில் அடக்கம்

ஓட்டமாவடி, ஓக. 16

ஓட்டமாவடியில் மேலும் 39 கோவிட்-19 தொற்றால் உயிரிழந்தவர்களின் சடலங்கள் அடக்கம் செய்யப்பட்டுள்ளன என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

கொரோனா தொற்று காரணமாக உயிரிக்கும் சடலங்கள் மட்டக்களப்பு - ஓட்டமாவடியிலுள்ள சூடுபத்தினசேனையில் அடக்கம் செய்யப்பட்டு வருகின்றன. இந்த நிலையில் நேற்றுமுன்தினம் இரவு வரை 39 சடலங் கள் அடக்கம் செய்யப்பட்டன. கொரோனா தொற்றால் உயிரி ழந்த முஸ்லிம்கள் 35, இந்துக் கள் 3, கிறிஸ்தவர் ஒருவர் என 39 பேரின் சடலங்கள் இவ்வாறு அடக்கம் செய்யப்பட்டுள்ளன. இதையடுத்து இதுவரை அங்கு அடக்கம் செய்யப்பட்ட சடலங்களின் எண்ணிக்கை 1661 ஆக அதிகரித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

## காணி பதிவு அலுவலகம் முடக்கம்

கல்முனை, ஓக. 16

கல்முனை காணிப்பதிவு காரியாலயத்தில் பணி புரியும் ஊழியர்கள் இருவருக்குக் கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டமையால், எதிர் வரும் 26 ஆம் திகதி வரை அந்த அலுவலகம் முடக்கப்பட்டது.

இதனால், எதிர்வரும் 26 ஆம் திகதிவரை மக்கள் சேவைகளைப் பெறமுடியாது இருக்கும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சில மாதங்களுக்கு முன்பும் இந்தக் காரியாலயம் கொரோனாத் தொற்றுக் காரணமாகப் பூட்டப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

## குளவி கொட்டி ஒருவர் மரணம்!

மட்டக்களப்பு, ஓக. 16

சிறுநீர் கழிப்பதற்காக வீட்டின் பின்பகுதிக்கு சென்றவரை குளவி கொட்டியதில் ஒருவர் உயிரிழந்தார்.

நேற்றுமுன்தினம் சனிக்கிழமை இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில், மட்டக்களப்பு நொச்சிமுனையை சேர்ந்த ஐயம்பிள்ளை கிருஷ்ணமூர்த்தி (வயது 48) என்பவரே உயிரிழந்தார். குளவி கொட்டி மயங்கிய வரை உறவினர்கள் மட்டக்களப்பு போதனா மருத்துவமனையில் சேர்ப்பித்தனர். ஆனால், அங்கு அவர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார் என்று தெரிய வருகின்றது. (ஐ)

## போதை வியாபாரிகள் இருவர் மட்டக்களப்பில் கைதாகினர்!

மட்டக்களப்பு, ஓக. 16

மட்டக்களப்பில் மிக நீண்டகாலமாக போதைப்பொருள் வியாபாரத்தில் ஈடுபட்டுவந்தனர் என்று சந்தேகிக்கப்படும் இருவரை, காத்தான்குடியில் மாவட்ட குற்ற விசாரணைப் பிரிவுப் பொறுப்பதிகாரி பி.எஸ். பி.பண்டார தலைமையிலான குழுவினர் கைது செய்துள்ளனர்.

காத்தான்குடி, 3 ஆம் குறுக்குத்தெருவில் உள்ள வீடொன்றில் வைத்தே இவர்கள் கடந்த 12 ஆம் திகதி இரவு 9.00 மணியளவில் கைது செய்யப்பட்டனர். இவர்களிடமிருந்து 2 கிலோ 50 கிராம் கேரள கஞ்சாவும் இந்தக் கடத்தலுக்குப் பயன்படுத்தப்பட்டு வந்த முச்சக்கர வண்டியும் கைப்பற்றப்பட்டன.

கைது செய்யப்பட்ட இருவரும் மேலதிக சட்ட நடவடிக்கைகளுக்காக மட்டக்களப்பு மாவட்டத் தலைமையகப் பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டு நீதிமன்றில் முற்படுத்தப்படவுள்ளனர். (ஐ)

## சமய நல்லிணக்கத்துக்காகவும் உழைத்தவர் மதுரை ஆதினம்!

### இந்து குருமார் அமைப்பு இரங்கல்

கொழும்பு, ஓக. 16

"ஆன்மீக பணி, அரசியல் பணி, சமுதாய பணி, சமய நல்லிணக்கம் எனப் பல வகையிலும் உழைத்தவர் - குரல் கொடுத்தவர் மதுரை ஆதினம். அவரின் சிவப்பிராப்தி நிலைக்கு இறை பிரார்த்தனை செய்கிறோம்", இவ்வாறு இந்து குருமார் அமைப்பு தெரிவித்துள்ளது.

மதுரை ஆதினம் அருணகிரிநாத ஶ்ரீ ஞானசம்பந்த தேசிக பரமாசாரிய சுவாமிகளின் மறைவு குறித்து இந்து குருமார் அமைப்பு அஞ்சலி குறிப்பு ஒன்றை விடுத்துள்ளது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டவையாவன, "சைவ சமயத்தை தென்னகத்தில் நிலைநிறுத்தவும், திருநீற்றின் ஒளி எங்கும் பரவவும் மதுரையில் திருஞானசம்பந்தரால் தோற்றுவிக்கப்பட்டது மதுரை திருஞானசம்பந்த சுவாமிகள் ஆதினம். இந்த ஆதினத்தின் 292ஆவது மகாசந்நிதானமாக விளங்கிய அருணகிரிநாத ஸ்ரீ ஞானசம்பந்த தேசிக பரமாசாரிய சுவாமிகள் சமயப்பணிக்கு அப்பால் ஆன்மீக பணி, அரசியல் பணி, சமுதாயப்பணி, சமய நல்லிணக்கம் என ப ல வகையிலும் உழைத்ததுடன் குரல் கொடுத்தார்கள்.

"எமது சமயத்திற்கு தொய்வு ஏற்பட்டுள்ளதுபோல ஆதீனத்தின் பரிபூரணமான செய்தி கிடைத்தது. ஆங்கில அறிவுடன் மாற்று சமய நூல்களின் அறிவு அவரிடம் சிறப்பாக இருந்தமை கண்டு வியந்துள்ளோம். மேலும், இலங்கையில் சைவமும் தமிழும் தழைத்தோங்க தொண்டாற்றியவரும், சிவாகமசேகரம், சிவலிங்கபிரதிஷ்டாவிதி உட்பட்ட பல சமஸ்கிருத, தமிழ் நூல்கள் இயற்றி வெளியிட்டுள்ள, எமது யாழ்ப்பாணம் அச்சுவேலி சிவாகமஞானபானு சிவஸ்ரீச குமாரசுவாமி குருக்கள் அவர்களுக்கு 'சிவாகமஞானபானு' எனும் சிறப்புப்பட்டத்தை பராபவ வருஷம் வைகாசி மாதம் 22 ம் நாள் 04.06.1966இல் ஆதீன ஆதிகுருமூர்த்தி திருஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள் குரு பூஜை தினத்தில் வழங்கியமையை எண்ணிப் பார்க்கிறோம்.

மகாசந்நிதானம் அவர்கள் சிவப்பிராப்தி நிலை பெற்றிட அன்பே உருவான பரம்பொருளை வேண்டி இறை பிரார்த்தனையை நாம் இலங்கையில் இருந்து இந்துக் குருமார் அமைப்பின் சார்பில் செய்கின்றோம்", என்றுள்ளது. (ஐ)

## மட்டக்களப்பில் மட்டும் 136 பேர் தொற்றுக்கு பலி!

மட்டக்களப்பு, ஓக. 16

மட்டக்களப்பு மாவட்டத்தில் கொரோனா தொற்றால் 145 பேர் மரணமடைந்தனர். மூன்றாவது அலையில் மாத்திரம் 136 மரணங்கள் பதிவாகியுள்ளன என்று மட்டக்களப்பு மாவட்ட பிராந்திய சுகாதார பணிப்பாளர் மருத்துவர் நா.மயூரன் தெரிவித்தார்.

அவர் நேற்று முன்தினம் நடத்திய ஊடக சந்திப்பிலேயே இதனைத் தெரிவித்தார்.

மேலும், முதலாம் கட்ட தடுப்பூசியை இரண்டு இலட்சத்து அறுபத்து ஐந்தாயிரம் பேர் பெற்றுக்கொண்டுள்ளனர். இரண்டாம் கட்டத் தடுப் பூசியை அறுபதாயிரம் பேர் பெற்றுக்கொண்டுள்ளனர்.

இதுவரை தொற்றால் மரணித்தவர்களில் ஆண்கள் 82 பேரும், பெண்கள் 63 பேரும் அடங்குவர். ஓட்டமாவடி சூடுபத்தினசேனையில் கொரோனா உடலங்களை அடக்குவதற்கு இடப்பற்றாக்குறை நிலவுவதாகவும், புதிய இடத்தினை அரசாங்கம் அடையாளம் கண்டு அதற்கான ஏற்பாடுகளை மேற்கொள்ளும் எனவும் அவர் தெரிவித்தார். (ஐ)

# பஸில், பீரிஸ், சுமந்திரன், மிலிந்த கூட்டு ஜெனிவாவுக்கான காய் நகர்த்தலா?









**"ஜெனிவா பேரவை அமர்வுக் காலங்களில் இவ்வாறான சந்திப்புகள் திடீர் தோசை, திடீர் இட்லி போன்று வெளியில் காட்டப்படும். ஆனால், இவை மூடப்பட்ட கதவுகளின் பின்னால் திட்டமிட்டு நடத்தப்படுபவை என்பதை தமிழ் மக்கள் கடந்த கால அனுபவங்களால் நன்றாகவே கற்றுக் கொண்டுள்ளனர். அடுத்த மாத அமர்வுக்கு முன்னர் எதற்காக இந்த அவசர சந்திப்புகள்? சர்வதேசத்தை எத்திப் பிழைக்க தமிழரைக் கட்டியணைக்கும் அதே நாடகம்தானா?**

**பனங்காட்டான்**

இலங்கை இப்போது இருமுனைப் போரில் ஈடுபட்டுள்ளது. முதலாவது உயிரியலுடன் சம்பந்தப்பட்ட கொரோனாப் பரவல். அடுத்தது, அரசியலுடன் தொடர்புடைய ஜெனிவா நெருக்கடி.

இவையிரண்டுமே நாட்டின் பொருளியலுடன் நேரடியாகச் சம்பந்தப்பட்டவை. இவை இரண்டுக்கும் ஏதோ ஒரு தீர்வு காணப்படாவிட்டால் நாட்டின் பொருளாதாரம் பாதாளத்துக்குள் சென்றுவிடும்.

கடந்தாண்டு ஆரம்பத்தில் கொரோனா பரவல் ஆரம்பித்த வேளையில் இலங்கை தன்னை வெகு ஆரோக்கியமான, முன்னெச்சரிக்கையான ஆட்சித்தரப்பாக உலகுக்குக் காட்டியது. உலக சுகாதார அமைப்பு அதனை நம்பி கண்களை மூடிக் கொண்டு இலங்கைக்கு பாராட்டுத் தெரிவித்தது.

ஆனால், இன்று நிலைமை தலைகீழாகியுள்ளது. உண்மையான எண்ணிக்கை மறைக்கப்பட்டு மிகக் குறைவான எண்ணிக்கையே வெளிப்படுத்தப்படுவதாக மருத்துவத்துறை அமைப்புகள் பகிரங்கமாக சாடியுள்ளன.

நாளொன்றுக்கு மூவாயிரம் வரையான தொற்றாளர் அடையாளம் காணப்படு கின்றனர். உடனடியாக ஊரடங்கு பிறப்பிக்கப்படாவிட்டால் சுமார் 1,200 மரணங்களை ஓரிரு நாட்களுக்குள் தடுக்க முடியாதென்று சமூக மருத்துவ அமைப்பின் தலைவரான பேராசிரியர் சுனேத் அகம்பொடி விடுத்துள்ள எச்சரிக்கையை ராணுவத் தரப்பு உதாசீனம் செய்துள்ளது.

புலிகளை ஒழித்த தங்களுக்கு கொரோனாவை எப்படி ஒழிப்பது என்பது தெரியுமென்ற ஜனாதிபதி கோட்டாபயவின் சவால் நகைப்புக்குள்ளாகி விட்டது. எறிகணைகளாலும் துப்பாக்கி ரவைகளாலும் கொரோனாவைக் கொன்றுவிட முடியுமென சவேந்திர சில்வா கனவு காண்கிறார். போர்க்குற்ற இராணுவ அதிகாரிகளையும், இராணுவ சீருடைகளையும் கண்டால் கொரோனா பயந்து அழிந்து விடுமா? அரசியலை உயிரியலுடன் இணைத்துப் பார்க்கும் விபரீதத்தால் அப்பாவி மக்கள் அல்லோலகல்லோலப்படுகின்றனர்.

தமிழர் தாயகபூமி கொரோனாவினால் பெருமளவு பாதிப்பு அடைந்து வருகிறது. சாதாரண மரணங்களையும் கொரோனாவாக்கி அவர்களின் இறுதிச் சடங்குகளும் மறுக்கப்படுகின்றது. இங்கு தடுப்பூசி பற்றாக்குறை.

உலக சுகாதார நிறுவனத்துடன் இணைந்து தகுதியான தடுப்பூசிகளை வரவழைத்து, கட்டாய அடிப்படையில் அவைகளை ஏற்றத் தவறினால் பௌத்த பிக்கு ஒருவர் குறிப்பிட்டது போன்று பாண் தயாரிக்கும் போறணைகளையும் தகனக்கிரியை நிலையங்களாக மாற்ற வேண்டிய நிலைமை உருவாகலாம்.

கொரோனப் பரவல் மோசமாகிக் கொண்டிருக்கும் இவ்வேளையில் இலங்கையிலுள்ள சீனத் தூதுவர் கியு சென்ஹொங், சுகாதார அமைச்சர் பவித்திரா வன்னியாராய்ச்சியிடம் முக்கிய கருத்தொன்றைப் பகிர்ந்துள்ளார். மருத்துவ ரீதியாக பரவி வரும் கொரோனாவின் பிறப்பிடம் எது என்ற தேவையில்லாத ஆராய்ச்சிகளை மேற்கொண்டு இதனை அரசியலாக்க வேண்டாமென்பதே அவர் தெரிவித்த கருத்து. இப்போது எதற்கு ரிஷி மூலம், நதி மூலம் என்ற இவரது ஆலோசனை அமெரிக்காவுக்குக் கூறப்பட்டதென்பது புரிந்தவர்களுக்குப் புரியும்.

அடுத்து, ஜெனிவா விவகாரத்தைப் பார்க்கலாம். வரப்போகும் எட்டுப் பத்து வாரங்கள் இதனையே மூலமாகக் கொண்டிருக்கப் போவதால், இன்றைய பத்தியில் இலங்கையின் இது தொடர்பான ஆரம்ப நகர்வுகளை மட்டும் பார்ப்போம்.

கொழும்பில் அமெரிக்கத் தூதுவர் தமது இல்லத்தில் அமைச்சர் ஜி.எல்.பீரிஸையும், தமிழ் அரசுக் கட்சியின் எம்.பி. சுமந்திரனையும் அழைத்து நிகழ்த்திய கலந்துரையாடல், பாராளுமன்ற வளாகத்தில் நிதியமைச்சர் பஸில் ராஜபக்ஷவை சுமந்திரன் எம்.பி சந்தித்து நடத்திய குறுகிய உரையாடல், இந்தியாவிலுள்ள ஈழத் தமிழர் நட்புறவு மையம் அதன் தலைவர் காசி ஆனந்தன் தலைமையில் ஏற்பாடு செய்த வட்டுக்கோட் டைத் தீர்மானம் -2 என்ற அமர்வு ஆகியவை ஜெனிவா சம்பந்தப்பட்டு இப்போது விமர்சிக்கப்படுபவை.

வட்டுக்கோட்டைத் தீர்மானம் -2 என்ற விடயம் இன்னும் ஆரம்ப கட்டத்திலேயே இருப்பதாலும், இது தொடர்பாக புகலிடத் தமிழர் தரப்பிலிருந்து எதிரும் புதிருமான கருத்துகள் முன்வைக்கப்பட்டு வருவதாலும் இது பற்றி இப்போது பார்வையை செலுத்த முடியாதுள்ளது. இது அடுத்த கட்டத்துக்கு வரும்போது இதனோடு பயணிப்பதே பொருத்தம்.

புவிசார் அரசியலைப் பயன்படுத்தி இலங்கைத் தமிழர் அரசியல் தீர்வுக்கு இந்தியப் பங்களிப்பைக் கோருபவர்கள் யாராக இருந்தாலும் 1976இன் தனிநாட்டுக் கோரிக்கையையும், விடுதலைப் புலிகளின் தமிழரின் தாகம் தமிழீழத் தாயகம் என்ற கோட்பாட்டையும் கைவிடாது செயற்படுவார்கள் என்றே வலி சுமக்கும் மக்கள் நம்பிக்கையுடன் எதிர்பார்க்கின்றனர்.

அடுத்த மாதம் 13ஆம் திகதி ஆரம்பமாகவுள்ள மனித உரிமைப் பேரவையின் 48ஆவது அமர்வு, இலங்கை விவகாரத்தைப் பொறுத்தளவில் மிக முக்கியமானது என்பது பலராலும் உணரப்பட்டது. கடந்த வாரப் பத்தியில் இதுபற்றிக் குறிப்பிட்டிருந்தேன்.

மார்ச் மாதம் நிறைவேற்றப்பட்ட 46:1 இலக்கத் தீர்மானத்தின் பிரகாரம் செப்டம்பர் அமர்வின் முதல் நாளான 13ம் திகதியன்று பேரவை ஆணையாளர் மிச்சேல் பச்லற் அம்மையார் இலங்கை தொடர்பான தமது பார்வையை வாய்மூல அறிக்கையாக வெளியிடுவார். இதற்கு இலங்கை அரசு பதிலளிப்பதற்காக, அறிக்கையின் பிரதி முற்கூட்டியே இலங்கைக்கு வழங்கப்படும்.

தற்போது இலங்கையின் வெளிவிவகார அமைச்சராகவிருக்கும் தினேஷ் குணவர்த்தனவா, அல்லது புதிய வெளி விவகார அமைச்சராக பதவி யேற்கப் போவதாகக் கூறப்படும் ஜி.எல்.பீரிஸா பதிலை வழங்கு வார் என்பது தெரியவில்லை. அடுத்த சில நாட்களில் பீரிஸ் வெளிவிவகார அமைச்சராகலாமென ஊடகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

இதன் முன்னோட்டமாகவே சுமந்திரனையும் பீரிஸையும் இலங்கையிலுள்ள அமெரிக்க தூதுவர் சந்தித்தாரென அரசியல் வட்டாரங்கள் கூறுகின்றன. அமெரிக்க இரட்டைப் பிரஜாவுரிமையை இன்னமும் தக்க வைத்திருக்கும் பஸில் ராஜபக்ஷ, தற்போதைய ஆட்சியில் முக்கிய பணிக்கு வரும்போதே இந்த நகர்வுகள் எதிர்பார்க்கப்பட்டன.

இவரது விருப்பத்தின் பேரிலேயே அமெரிக்கத் தூதுவரின் சந்திப்பு இடம்பெற்றதாக நம்பகரமான செய்திகள் தெரிவிக்கின் றன. அமெரிக்கா இதுபற்றி எந்த விபரத்தையும் வெளியிடப் போவதில்லை. அமைச்சர் பீரிஸ் அல்லது சுமந்திரன் தெரிவித் தால் மட்டுமே சந்திப்பின் பின்ன ணியும், அதன் சூட்சுமமும் தெரிய வரும்.

ஒரு வருடத்துக்கு முன்னர் இந்தியாவுக்கு இலங்கையின் தூதுவராக நியமிக்கப்பட்ட மிலிந்த மொறகொட இந்த மாதத்தில் அப்பதவியை ஏற்க வுள்ளார். அமைச்சர் அந்தஸ் துடனான இந்தப் பதவி மிலிந்தவுக்கு வழங்கப்பட்டுள்ளது. பஸில் ராஜபக்ஷவின் அரசியல் பிரவேசத்தின் பின்னரே இவர் பதவி ஏற்பதும் முக்கியமாக கவனிக்கப்படுகிறது. மிலிந்த மொறகொட அமெரிக்க அரசியல் சார்பாளர் என்பது ரகசியமன்று.

ஆக, ஜி.எல். பீரிஸ், எம்.ஏ.சுமந்திரன், பஸில் ராஜபக்ஷ, மிலிந்த மொறகொட ஆகியோரை மையப்படுத்தி ஆரம்பித்திருக்கும் அரசியல் சதுரங்கம் ஜெனிவாவுக்கான ஒரு முக்கிய முன்னோட்டம். 2002-2003 ஆண்டு காலப்பகுதியில் விடுதலைப் புலிகளுக்கும் ரணில் விக்கிரமசிங்க அரசாங்கத்துக்குமிடையில் வெளிநாடுகளில் இடம்பெற்ற ஆறு சுற்றுப் பேச்சுகளில் அரசாங்க தூதுக்குழுவின் பிரதிநிதிகளாக அப்போது அமைச்சர்களாகவிருந்த பீரிஸும், மிலிந்த மொறகொடவும் இப்பொழுது மீண்டும் தமிழர் விவகாரத்தில் களமிறக்கப்படு கிறார்கள் என்றால்.... இரண்டும் இரண்டும் நான்கு என்ற எண்கணிதம் எவருக்கும் புரியாததல்ல.

சுமந்திரனின் தற்போதைய பேச்சுகளின் வகிபாகம் பற்றி தமிழர் தரப்பில் நம்பிக்கையைவிட நம்பிக்கையின்மையே அதிகமுண்டு. நல்லாட்சி அரசாங்கத்தின் நாலரை ஆண்டில் தமிழரின் அரசியல் தீர்வுக்கு எதனையுமே பெற்றுக் கொடுக்காது ஆட்சித் தரப்புக்கு முண்டு கொடுப்பவராக அவர் இருந்ததை தமிழர்கள் மறந்துவிடவில்லை. இப்போதும் அதே பாணியில் ஜெனிவாவில் இலங்கையைப் பிணை எடுப்பதற்கு பேச்சு பிரதி நிதியாக தமிழர் தரப்பிலிருந்து - ஒரேயொருவராக, ஒற்றையராகக் கலந்து கொள்வது ஏனென்ற கேள்வி எழுகிறது. தமிழ் அரசுக் கட்சியின் பிரதிநிதியாகவா அல்லது தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் பிரதிநிதியாகவா இவர் பங்குபற்றுகிறார் என்ற கேள்வியும் கூட்டமைப்புக்குள்ளேயே எழும்பியுள்ளது.

சர்வதேச அரங்கில் சிங்கள தேசம் நெருக்கடிகளைச் சந்திக்கும் நேரங்களில் இவரே அவர்களுக்குத் தோன்றாத் துணையாகி விடுவார். இப்போதும் அதுவே ஆரம்பமாகி விட்டதாக மற்றைய தமிழ்க் கட்சிகள் விசனம் கூறுகின்றன.

மனித உரிமைப் பேரவைத் தீர்மானங்களை செயலற்றுப் போகச் செய்யவும், சர்வதேச நெருக்கடிகளை ஓரந்தள்ளவும் தமிழர் தரப்புடன் பேச்சுகளை நடத்தி எத்திப் பிழைக்கும் அரசியலை சிங்கள ஆட்சி பீடங்கள் ஒழுங்காகவே மேற்கொண்டு வருகின்றன.

இது ஜெனிவா கால வழமையான அரசியல் என்பதை உணர்ந்து, சிங்கள அரசின் சதிப் பின்னல் வலையில் தமிழர் தரப்பு சிக்குண்டு போகும் அபாயம் கண்முன்னால் தெரிகிறது. ஒருவர் கையில் மட்டும் தமிழரின் தலைவிதி அடக்கப்படுமானால், சர்வதேசத்தின் முன்னால் தமிழர்கள் தங்கள் தலைவிதியை தீர்மானிக்கும் சக்தியற்றவர்களாக மாற்றப்படும் அபாயமுண்டு. ■



# ஆப்கானிஸ்தான் போருக்காக 162 இலட்சம் கோடி ரூபாய் செலவழித்த அமெரிக்கா

20 ஆண்டுகளுக்குப் பிறகு மேற்குலகப் படைகள் ஆப்கானிஸ்தானை விட்டு வெளியேறியதால் தலிபான்கள் அதிவேகமாக ஆப்கானை கைப்பற்றி வருகிறார்கள். 2021 செப்ரெம்பர் 11ஆம் திகதிக்குள் ஒட்டுமொத்த அமெரிக்க படையையும் ஆப்கனில் இருந்து வெளியேற்ற அமெரிக்க அதிபர் ஜோ பைடன் விரும்புகிறார்.

ஆப்கானிஸ்தானில் போர் தொடங்கியதில் இருந்து நேட்டோ மற்றும் அமெரிக்கா எவ்வளவு செலவழித் திருக்கின்றன என்பதைப் பார்ப்போம். இரட்டை கோபுர தாக்குதலுக்குப் பிறகு ஒக்ரோபர் 2001இல் அமெரிக்க படைகள் ஆப்கானிஸ்தானில் புகுந்தன.

தலிபான்களை எதிர்கொள்ள பில்லியன் டாலர் கணக்கில் அமெரிக்கா பணத்தை வாரி இரைத்தது. ஆப்கானிஸ்தானில் அமெரிக்க துருப்புகளின் எண்ணிக்கையும் 2011ஆம் ஆண்டு அதிகபட்சமாக 1,10,000 பேரைத் தொட்டது குறிப்பிடத்தக்கது.

ஆனால், கடந்த ஆண்டு வெறும் இது 4,000 துருப்புகளாகவும், தற்போது 650 துருப்புகளாகவும் சுருங்கி இருக்கிறது. அவர்களும் அமெரிக்க வெளியுறவு அதிகாரிகளுக்கு பாதுகாப்பு கொடுக்க அங்கு இருக்கிறார்கள். நேட்டோ படைகள் இருந்தாலும், அமெரிக்கா தான் அதிக அளவில் ஆட்களை களமிறக்கி இருந்தது.

2010 - 2012 காலத்தில், ஆப்கானிஸ்தானில் ஒரு இலட்சத்துக்கும் மேற்பட்ட துருப்புகளைக் கொண்டிருந்த காலத்தில், ஆண்டுக்கு 100 பில்லியன் டொலர் வரை செலவழித்தது அமெரிக்கா. அதிரடி தாக்குதல் திட்டங்களிலிருந்து இராணுவம் தன் கவனத்தை திசை திருப்பி, ஆப்கான் படைகளுக்கு பயிற்சி வழங்கத் தொடங்கிய பின் செலவுகள் கணிசமாக குறைந்தன.

கடந்த 2018ஆம் ஆண்டு, அமெரிக்கா ஆப்கானிஸ்தானில் சுமார் 45 பில்லியன் டொலர் செலவழித்ததாக மூத்த பென்டகன் அதிகாரி ஒருவர் அமெரிக்க காங்கிரசிடம் கூறியுள்ளார். அமெரிக்க பாதுகாப்பு அமைச்சகத்தின் கணக்குப் படி, 2001 - 2019 வரையான காலத்தில் அமெரிக்கா ஆப்கானிஸ்தானில் இராணுவத்துக்காக 778 பில்லியன் டொலரைச் செலவழித்திருக்கிறது.

அதுபோக அமெரிக்காவின் உள் துறை அமைச்சகம் போன்ற மற்ற சில அமெரிக்க முகாமைகள் எல்லாம் சேர்த்து சுமார் 44 பில்லியன் டொலரை ஆப்கானிஸ்தான் போருக்கு செலவழித்து இருக்கின்றன. ஒட்டுமொத்தத்தில் 822 பில்லியன் டொலர்.

இதை இலங்கை ரூபாய் மதிப்பில் கணக்கிட்டால் கடந்த 18 ஆண்டுகளில் சுமார் 162 இலட்சம் கோடி ரூபாய் வருகிறது என ஒரு புரிதலுக்காக வைத்துக் கொள்ளலாம். 18 ஆண்டுகள் என்பதால் ஒவ்வோர் ஆண்டும் அமெரிக்க டொலருக்கு நிகரான இலங்கை ரூபாய் மதிப்பு மாற்றம் கண்டு இருக்கும் என்பது வேறு.

இதை எல்லாம் தாண்டி, ஒவ்வோர் அமெரிக்க முகாமைகள் மற்றும் அமைச்சகங்கள் கணக்கு வழக்குகளை பராமரிக்கும் முறை வித்தியாசமாக இருக்கும் என்பதால் சரியாக எவ்வளவு செலவானது என கணக்கிட்டுச் சொல்வது கடினமானது.

அமெரிக்கா மற்றும் நேட்டோ படைகள் ஆப்கானிஸ்தானில் இருந்து பின் வாங்கினாலும் அரசுப் படைகளுக்கு ஆண்டுக்கு 4 பில்லியன் டொலர் வீதம், 2024ஆம் ஆண்டு வரை உதவி செய்ய ஒப்புக் கொண்டுள்ளன. ஏற்கனவே இந்த ஆண்டில் நேட்டோ 72 மில்லியன் டொலர் அளவிலான சாதனங்கள் உள்ளிட்டவற்றை தந்திருக்கிறது.

கிளர்ச்சியாளர்களுக்கு எதிரான நடவடிக்கைகள், இராணுவ வீரர்களின் உணவு, உடை, மருத்துவ வசதிகள், அவர்களுக்கான சிறப்பு ஊதியம், சலுகைகளுக்கே அதிகம் செலவானது. கடந்த 2002ஆம் ஆண்டு முதல் அமெ ரிக்கா இதுவரை சுமார் 143.27 பில்லியன் டொலரை ஆப்கானிஸ்தான் மறுகட்டுமானத்துக்காக செலவழித்துள்ளது.

அதில் 88.32 பில்லியன் டாலர் வரை ஆப்கானிஸ்தானின் இராணுவத்தைக் கட்டமைக்க செலவழிக்கப்பட்டது. இதில் ஆப்கானிஸ்தான் தேசிய ராணுவம் மற்றும் காவலர்கள் படை இரண்டுமே அடக்கம்.

கிட்டத்தட்ட 36 பில்லியன் டொலர் அரசு நிர்வாகத்துக்கும், வளர்ச்சிக்கும் ஒதுக்கப்பட்டது. இந்த நிதியில் சிறு சிறு பகுதிகள் போதை மருந்துக்கு எதிரான நடவடிக்கைக்கும், சில மனிதாபிமான உதவிகளுக்கும் செலவழிக்கப்பட்டது. ஆப்கானிஸ்தானுக்கு ஒதுக்கப்பட்ட நிதியை தவறாக பயன்படுத்தியது, வீணடித்தது, மோசடி செய்தது என மே 2009 முதல் டிசம்பர் 2019 வரை கிட்டத்தட்ட 19 பில்லியன் டொலர் வீணடிக்கப்பட்டிருப்பதாக ஒக்ரோபர் 2020இல் அமெரிக்க காங்கிரஸில் தாக்கல் செயப் பட்ட அறிக்கை ஒன்றில் கூறப்பட்டிருக்கிறது. - பி.பி.சி.

---

# ஆப்கான் அகதிகளை அனுப்புவதை பிரான்ஸ், ஜேர்மனி இடைநிறுத்தின

ஆப்கானிஸ்தானின் அரசியல் தலைவிதி இரண்டு தசாப்த காலத்துக்கு முந்திய நிலைக்குத் திரும்புகிறது. அமெரிக்கா உட்பட வெளிநாடுகளின் படைகள் அங்கிருந்து வெளியேறியதை அடுத்து - சிலவார கால இடைவெளிக்குள்- நாட்டின் எண்பது வீதமான பகுதிகளை தாலிபான் படைகள் கைப்பற்றி விட்டன.

நாட்டின் இரண்டாவது, மூன்றாவது பெரிய நகரங்களாகிய கந்தஹார் (Kandahar) ஹெரத்(Herat) இரண்டையும் கைப்பற்றிவிட்ட தலிபான்கள் சனிக்கிழமை தலைநகரில் இருந்து 11 கிலோ மீற்றர்கள் தொலைவில் நிலைகொண்டிருந்தனர் என்று செய்திகள் வெளியாகிஉள்ளன.

ஆப்கானிய மக்கள் பலரும் தாங்கள் உலகத்தால் கைவிடப்படுவதாக உணர்கின்றனர். பெரும் பதற்றத்துக்கு மத்தியில் அதிபர் அஷ்ரப் கானி (Ashraf Ghani) நாட்டுக்கு ஆற்றிய ஓர் உரையில், தலிபான்களிடம் இருந்து தலைநகரைப் பாதுகாப்பதற்காக மீள அணிதிரளுமாறு தனது முப்படையினருக்கும் அழைப்பு விடுத்திருக்கிறார்.

தாலிபான்கள் மோதலைத் தவிர்த்து அரசியல் வழிமுறைகளில் அதிகாரத்துக்கு வருவதற்கான முயற்சிகளில் இறங்க வேண்டும் என்று ஐ. நா. செயலாளர் நாயகம் கேட்டிருக்கிறார்.

நாட்டின் தேசியத் தலைநகரான காபூல் வரும் நாட்களில் தாலிபான்களிடம் வீழும் என்று எதிர்பார்க்கப்படுவதால் அங்கு பெரும் பதற்றம் நிலவுகிறது. அமெரிக்கா அங்குள்ள தனது இராஜதந்திரிகளையும் அவர்களது குடும்பங்களையும் பாதுகாப்பாக வெளியேற்றுவதற்காக மூவாயிரம் துருப்பினரை காபூலில் இறக்கி உள்ளது. இங்கிலாந்து தனது பிரஜைகள் வெளியேற்றுவதற்காக அறுநூறு படைவீரர்களை அங்கு அனுப்பியிருக்கிறது. பலநாடுகளும் தங்களது தூதரகப் பணியாளர்களது எண்ணிக்கையைக் குறைத்து மூடுவதற்கான ஆயத்த நிலையில் உள்ளன.

டென்மார்க், நோர்வே தூதரகங்கள் மூடப்பட்டவிட்டன. டென்மார்க் தனது தூதரகத்தில் பணிபுரிந்த ஆப்கானியர்களுக்கும் அவர்களது குடும்பங்களுக்கும் தனது நாட்டில் அரசியல் புகலிடம் அளித்துள்ளது.

**20 ஆயிரம் பேருக்கு கனடாவில் புகலிடம்**

மிக முக்கிய உதவியாக கனடா நாடு பெண்கள், சிறுவர்கள், பத்திரிகையாளர்கள், மனித உரிமைச் செயற்பாட்டாளர்களான சுமார் இருபது ஆயிரம் ஆப்கானிஸ்தானியர்களைத் தனது நாட்டில் குடியமர்த்த முன்வந்துள்ளது. அமெரிக்கா உட்பட வெளிநாட்டுப் படையினருக்கு மொழிபெயர்ப்பாளர்களாகப் பணியாற்றிவந்த நூற்றுக் கணக்கான ஆப்கானிஸ்தான் பிரஜைகளுக்கும் பலநாடுகளில் தஞ்சம் வழங்கப்பட்டுள்ளது.

ஆப்கானிஸ்தான் அரசியல் நிலைவரம் நிச்சயமற்ற நிலைமைக்குள் சென்று கொண்டிருப்பதால் தத்தமது நாடுகளில் அரசியல் தஞ்சம் மறுக்கப்பட்ட ஆப்கானிஸ்தானியர்களைக் கட்டாய மாகத் திருப்பிஅனுப்புவதை பிரான்ஸ், ஜேர்மனி, நெதர்லாந்து ஆகிய நாடுகள் இடைநிறுத்திஉள்ளன.

சமீப காலமாக பிரான்ஸில் அரசியல் தஞ்சம் கோருகின்ற வெளிநாட்டவர்களில் ஆப்கானிஸ்தானியர்களே முதலிடத்தில் உள்ளனர். கடந்த ஆண்டில் மட்டும் சுமார் 8 ஆயிரத்து 886 ஆப்கானியர்கள் பிரான்ஸில் தமது தஞ்சக் கோரிக்கைகளைச் சமர்ப்பித்துள்ளனர்.

தற்போது இடம்பெறும் மோதலகளில் பல இலட்சக்கணக்கானோர் உள்நாட்டில் இடம்பெயர்ந்துள்ளனர். அதனால் வரும் நாட்களில் அங்கிருந்து குடிபெயர்வோர் எண்ணிக்கை மேலும் அதிகரிக்க வாய்ப்புள்ளது. ■

பாரிஸிலிருந்து குமாரதாஸன்



# புலமைச் சிகரம் — தரம் 5 புலமைப் பரிசில் மாணவர்களுக்கான வழிகாட்டி

மாதிரிப் பரீட்சை வினாத்தாள் - II

நேரம் - 1 மணித்தியாலம் 15 நிமிடம்

கல்வி tv CHANNEL

(ii) பின்வரும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான பழமொழியைப் புள்ளிக்கோட்டில் எழுதுக.
ஒருவர் செய்யும் நன்மை தீமை அவரையே வந்து சேரும்.

……………………………………………………………………

**07) பின்வரும் ஒவ்வொரு வாக்கியத்திலும் உள்ள சரியான எழுத்துக் கூட்டல் உள்ள சொற்களை அடைப்புக்குறியினுள் இருந்து தெரிவு செய்து அதன் கீழ்க் கோடிடுக.**

(i) ஆசிரியர் மாணவர்களுக்கு …………………………… (ஆலோசனை, ஆலோசணை) கூறினார்.

(ii) கலை விழாவினைக் …………………… (கண்டுகழிக்க, கண்டுகளிக்க) எல்லோரும் வாருங்கள்.

08) (i) பின்வரும் வாக்கியத்தை எதிர்காலத்தில் எழுதுக.

மீன்கள் குளத்தில் நீந்தின……………………………………

(ii) பின்வரும் கருத்தை குறித்து விளக்கும் மரபுத்தொடரை எழுதுக.

அறிவுண்டாதல்…………………………………………………

**09) பின்வரும் தொனிகளுக்குரிய பிராணியின் பெயரை எழுதுக.**


i) பிளிறும் ……………………… ii) ரீங்காரம் செய்யும் …………………………


**10) பின்வரும் சுருக்கக் குறியீடுகளின் விரிவினை எழுதுக.**

i) இ. போ. ச. - ……………………………………………………

ii) ம. ப. பா - ……………………………………………………

**11) தரப்பட்டுள்ள ஒவ்வொரு படத்திற்கும் பொருத்தமான ஆங்கிலச் சொல்லை ஆங்கில எழுத்துக்களில் எழுதுக.**





i) …………………………………… ii) ……………………………………

**12) கீழே தரப்பட்டுள்ள சொற்களைச் சரியாக ஒழுங்குபடுத்தி கருத்துள்ள வாக்கியமாக்கி எழுதுக.**

i) a / am / reading / I / book

……………………………………………………………………

ii) are / These / ears / my

……………………………………………………………………

**13) தரப்பட்டுள்ள ஆங்கிலச் சொற்களுக்குரிய தமிழ்சொற்களை எழுதுக.**

(i) Dustbin : ………………………… (ii) National Anthem : …………………………

14) **(i)** சிங்களச் சொல்லுக்குரிய தமிழ்ச் சொல்லை எழுதுக.

සීයා - ……………………………………………………………

(ii) பின்வரும் வாக்கியம் சிங்களத்தில் சொல்லப்படும் விதத்தினைத் தமிழில் எழுதுக.

මෙහෙ එන්න : ……………………………………………………

15) "இருபத்தெட்டாயிரத்து தொள்ளாயிரத்து ஒன்பது" என்னும் எண்ணுடன் ஒன்றைக் கூட்டும் போது கிடைக்கும் எண்ணை இலக்கங்களில் எழுதுக.

……………………………………………………………………

16) 30425 என்ற எண்ணில் இலக்கம் 4 இன் இடப்பெறுமானம் யாது?


……………………………………………………………………

17) 4 தீக்குச்சிகளைப் பயன்படுத்தி உரோம எண்குறியில் 7 என்பதை வகை குறித்துக் காட்டலாம். எனின், 17 என்பதை உரோமன் எண்குறியில் காட்டுவதற்கு எத்தனை தீக்குச்சிகள் தேவைப்படும்.

……………………………………………………………………

18) பின்வரும் உருவில் $\frac{1}{2}$ பங்கினை

பென்சிலால் அல்லது பேனாவால் நிழற்றிக் காட்டுக.



19) பாத்திரம் ஒன்றின் கொள்ளளவு 3 லீற்றர் ஆகும். அப்பாத்திரத்தில் 1 லீற்றர் 400 மில்லி லீற்றர் அளவு நீர் உள்ளது. அப்பாத்திரம் முழுமையாக நிரப்புவதற்கு மேலும் தேவைப்படும் நீரின் அளவு யாது?

……………… லீற்றர் ……………… மில்லிலீற்றர்

20) 636 புத்தகங்களை 6 பாடசாலைகளுக்கு சமமாக பகிர்ந்தளிக்கும் போது ஒரு பாடசாலைக்கும் கிடைக்கும் புத்தகங்கள் எத்தனை?

……………………………………………………………………

21) கடையொன்றில் உள்ள 68 முட்டைகளில் $\frac{3}{4}$ விற்பனை செய்தால் எஞ்சிய முட்டைகளின் எண்ணிக்கை யாது?

……………………………………………………………………

22) குமாரின் வயது 12 வருடங்கள் 6 மாதங்களும், நாதனின் வயது 7 வருடங்கள் 8 மாதங்களும் ஆகும். இருவரின் வயதுகளின் கூட்டுத்தொகை யாது,

…………… வருடங்கள் ………………… மாதங்கள்

ஈழநாடு

# 11 ஆயிரம் தொற்றாளர்கள் வீடுகளில் தனிமைப்படுத்தல்

## சுவாச பிரச்னைகள் காரணமாக 500 பேர் வைத்தியசாலைகளுக்கு அனுப்பிவைப்பு

கொழும்பு, ஓக.16

**இலங்கையில் கொரோனாத் தொற்றாளர்கள் 11 ஆயிரம் பேர் வீடுகளில் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர் என்று குடும்ப மருத்துவ நிபுணர்களின் சங்கம் தெரிவித்துள்ளது.**

இது தொடர்பில் அந்தச் சங்கம் மேலும் தெரிவித்ததாவது:-

”வைத்தியசாலைகள் மற்றும் சிகிச்சை நிலையங்களில் இடநெருக்கடியைத் தவிர்க்கும் வகையில் கொரோனாத் தொற்றாளர்களை வீடுகளில் தனிமைப்படுத்தல் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

தொற்றாளர்கள் வீடுகளில் தனிமைப்படுத்தப்பட்டுள்ள பகுதிகளில் சுகாதார வைத்திய அதிகாரிகள் மூலம் குறித்த நோயாளிகள் தரவுத்தளத்தில் பதிவு செய்யப்பட்டு 1390 என்ற தொலைபேசி எண் கொடுக்கப்படுகின்றது.

அதன் பின்னர் நோயாளிகள் தொடர்பான அனைத்து நடவடிக்கைகளும் மருத்துவ மேற்பார்வையின் கீழ் மேற்கொள்ளப்படுகின்றன.

1390 என்ற இலக்கம் ஊடாக நோயாளிகளிடம் தொலைபேசி ஊடாக உரையாடி சுவாசப் பிரச்னைகள் உள்ளதா என்பது தொடர்பில் வினவப்படுகின்றது.

அவ்வாறான பிரச்னைகள் இருந்தால் நுரையீரல் தொற்று



ஆரம்பித்துவிட்டது எனக் கருதப்படுகின்றது. அதை முன்கூட்டியே கண்டறிவது மிகவும் முக்கியம்.

வீடுகளில் தனிமைப்படுத்தப்பட்டுள்ள 11 ஆயிரம் கொரோனா நோயாளிகளில் 500 பேர் வரையில் மேலதிக சிகிச்சைகளுக்காக வைத்தியசாலைகளில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

சுவாசப் பிரச்னைகள் காரணமாக இவர்கள் வைத்தியசாலைகளில் சேர்க்கப்பட்டுள்ளனர்” - என்றார். (இ)

---

### உப பொலிஸ் பரிசோதகர் கொரோனாவால் மரணம்

கொழும்பு, ஓக. 16

திடீர் சுகயீனம் காரணமாக உடுகம வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டிருந்த உப பொலிஸ் பரிசோதகர் ஒருவர் உயிரிழந்தார்.

அவருக்கு மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனையில் கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

உடுகம் பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றிய 53 வயதுடைய உப பொலிஸ்பரிசோதகரே இவ்வாறு உயிரிழந்தார். (இ)

---

### விருந்தில் பங்கேற்ற 48 பேர் சுயதனிமை

மஸ்கெலியா, ஓக. 16

எந்தவொரு அனுமதியும் பெறாமல் பூப்பனித நீராட்டு விழா விருந்தை நடத்திய குடும்பத்தவர்கள் உட்பட, 48 பேர் சுயதனிமைப்படுத் தப்பட்டுள்ளனர் என்று மஸ்கெலியா பொதுச் சுகாதார அதிகாரிகள் தெரிவித்தனர்.

நோர்வூட் பகுதியில் பூப்புனித நீராட்டு விழா விருந்து பொதுச் சுகாதாரப் பிரிவினரின் அனுமதி பெறாமலேயே நடத்தப்பட்டுள்ளது. இது தொடர்பில் சுகாதார அதிகாரிகளுக்குக் கிடைத்த தகவலுக்கமைய அவ்விடத்துக்குச் சென்ற அதிகாரிகள்நிகழ்வில்கலந்து கொண்டவர்கள், வீடுகளிலேயே சுயதனிமைப்படுத்தியுள்ளனர். (இ)

---

## சுகாதார பரிசோதகர்களை தாக்கியோருக்கு விளக்கமறியல்

திக்வெல்ல பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கொஹூந்தெனிய பிரதேசத்தில் பொதுச் சுகாதாரப் பரிசோதகர்களின் கடமைக்கு இடையூறு விளைவித்த குற்றச்சாட்டில் கைதுசெய்யப்பட்ட இருவரை எதிர்வரும் 23ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு மாத்தறை நீதிவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

இந்தத் தகவலை பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்துள்ளார்.

திக்வெல்ல பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் இருவரது கடமைக்கு இடையூறு விளைவிக்கப்பட்டுள்ளதுடன் அவர்கள் மீது தாக்குதலும் மேற்கொள்ளப்பட்டுள்ளது. கொரோனாத் தொற்றால் மரணமடைந்த ஒருவர் தொடர்பில் கிடைக்கப்பெற்றத் தகவலுக்கு அமைவாக அவரது குடும்பத்தாரை தனிமைப்படுத்து வதற்குச் சென்றபோதே, பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள்இருவரும்தாக்குதலுக்குள்ளாகியுள்ளனர். இது தொடர்பில் செய்யப்பட்ட முறைப்பாட்டுக்கு அமைவாக விசாரணைகளை மேற்கொண்டு வந்த பொலிஸார், சந்தேகநபர்கள் இருவரைக் கைது செய்துள்ளதுடன் அவர்களை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தியபோதே நீதிவான் இந்த உத்தரவைப் பிறப்பித்துள்ளார். (இ)

---

## தனிமைப்படுத்தல் சட்டத்தை மீறிய 54,359 பேர் இதுவரை சிக்கினார்கள்

### பொலிஸ் பேச்சாளர் தெரிவிப்பு

கொழும்பு, ஓக. 16

நாட்டில் தனிமைப்படுத்தல் சட்டவிதிமுறைகளை மீறிய மேலும் 108 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

இதற்கமைய இதுவரை தனிமைப்படுத்தல் சட்டவிதிமுறைகளை மீறிய குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டோரின் எண்ணிக்கை 54 ஆயிரத்து 359ஆக உயர்வடைந்துள்ளது எனப் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்தார்.



இதேவேளை, மாகாணங்களைக் கடந்து பயணிப்பதற்கு தடைவிதிக்கப்பட்டுள்ள நிலையில் தடையுத்தரவையும் மீறி நேற்றுமுன்தினம் மேல் மாகாணத்துக்குள் உட்பிரவேசிக்க முயன்ற 582 பேர் திருப்பி அனுப்பப்பட்டுள்ளனர் எனவும் அவர் குறிப்பிட்டார்.

அதேபோன்று அதிவேக வீதிகளுக்குப் பிரவேசிக்கும் வாகனங்களும் விசேட சோதனைக்கு உட்படுத்தப்பட்டு வருகின்றன எனவும் அவர் மேலும் கூறினார். (இ)

---

## பண்டாரகமவில் ஒரேநாளில் நூறு பேருக்கு கொரோனா!

பண்டாரகம, ஓக. 16

பண்டாரகம பொதுச்சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் நேற்று 252 பேருக்கு மேற்கொள்ளப்பட்ட அன்ரிஜென் பரிசோதனையில்100 பேருக்குக்கொரோனா வைரஸ்தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது எனப் பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் தெரிவித்துள்ளனர். குறித்த பொதுச் சுகாதாரப் பிரிவுக்கு உட்பட்டவர்களே அன்ரிஜென்பரிசோதனைக்கு வந்திருந்தனர் எனவும், இவர்களில் 100 பேருக்குத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது எனவும் அவர்கள் மேலும் குறிப்பிட்டுள்ளனர். இதையடுத்து தொற்றுக்குள்ளானவர்களும் அவர்களுடன் தொடர்பைப் பேணியவர்களும் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர். (இ)

---

## கொக்குவில் வயோதிபர் கொரோனாவால் மரணம்

யாழ்ப்பாணம், ஓக. 15

யாழ்ப்பாணத்தில் மேலும் ஒருவர் கொரோனா வைரஸ் தொற்றால் உயிரிழந்தார்.

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த கொக்குவிலைச் சேர்ந்த 75 வயதுடைய ஆண் ஒருவர் நேற்றுமுன்தினம் இவ்வாறு உயிரிழந்தார்.

இதன்மூலம் யாழ்ப்பாணம் மாவட்டத்தில் கொரோனாத் தொற்றால் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 177ஆக உயர்வடைந்துள்ளது. (இ)

---

## தான வீட்டில் பங்கேற்றவர்களில் 14 பேருக்கு கொரோனா தொற்று

### 90 பேர் கட்டாய சுயதனிமைப்படுத்தலில்

பதுளை, ஓக. 16

பதுளை மாவட்டம், ஹல்துமுல்லை பிரதேசத்தில்இடம்பெற்ற தான வீடொன்றில் பங்கேற்றவர்களில்14 பேருக்குக் கொரோனா வைரஸ்தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது எனக் கொஸ்லாந்தை பொதுச் சுகாதாரப் பரிசோதகர் சானக்க மதுரங்க தெரிவித்தார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

”குறித்த தான வீட்டில் பங்கேற்ற இரண்டு பெண்களுக்கு முதலில் கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. இதையடுத்து தான வீட்டில் பங்கேற்ற அனைவருக்கும் மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனையில் 14 பேருக்குத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. தொற்றுக்குள்ளானவர்களில் தான வீட்டைச் சேர்ந்த இரு பெண்களும்உள்ளடங்குகின்றனர்.

குறித்த கிராமத்தில் 190 பேர் பி.சி.ஆர். பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர். அவர்கள் அனைவரும் கட்டாய தனிமைப் படுத்தப்பட்டுள்ளனர்” - என்றார். (இ)





# ஆப்கானிஸ்தான் ஆட்சியை கைப்பற்றினர் தலிபான்கள்!

## இடைக்கால தலைவராகிறார் அலி அஹமது!

காபூல், ஓக. 16

ஆப்கானிஸ்தானின் ஆட்சியை தலிபான்கள் நேற்று கைப்பற்றினர். அமெரிக்க இராஜதந்திரிகள் ஹெலிகொப்டரில் வெளியேறியதைத் தொடர்ந்து தலைநகரின் எல்லைகளில் நின்ற தலிபான்கள் நகருக்குள் நுழைந்தனர்.

இதனிடையே, ஆப்கானிஸ்தானின் இடைக்கால தலைவராக முன்னாள் உள்விவகார அமைச்சரான அலி அஹமட் ஜலாலி அறிவிக்கப்படுவார் என்று ரொய்ட்டர்ஸ் செய்திச் சேவை தெரிவித்தது. அமெரிக்காவின் கல்வி கற்றவரான ஜலாலி 2004 முதல் 2005 வரை உள்விவகார அமைச்சராக பதவி வகித்தவர்.

தீவிரவாத அமைப்பு ஒன்று நாடு ஒன்றை மிகக்குறுகிய நாட்களுக்குள் கொண்டுவருவதுடன், ஆட்சியைக் கைப்பற்றுவதும் இந்த நூற்றாண்டில் இதுவே முதல் சம்பவமாகும்.

எனினும், தலைநகரில் குவிந்துள்ள பல்லாயிரக்கணக்கான மக்கள் தப்பிச் செல்வதற்கு முயன்று வருகின்றனர். தலிபான்கள் முழுநாட்டையும் கைப்பற்றியபோதும், விமான நிலையங்களையும், மருத்துவமனைகளையும் தொடர்ந்து இயங்க அனுமதித்துள்ளனர். நீள வரிசைகளில் மக்கள் வெளியேறக் காத்திருக்கின்றனர் என்று தெரிய வருகின்றது.

இதேவேளை, அமெரிக்கத் தூதரகத்தின் பணியாளர்கள் 5 ஆயிரம் அமெரிக்க படையினரின் பாதுகாப்புக்கு மத்தியில் வெளியேறி வருகின்றனர்.

அரசாங்கம், வடக்கில் சிறுநகரமும் - இராணுவ முக்கியத்துவம் வாய்ந்ததுமான மஷார் இ -ஷெரீப்பை சனிக்கிழமை இழந்தது. இதன் மூலம் அனைத்து முக்கிய நகரங்களையும் அரசாங்கம் தலிபான்களிடம் இழந்திருந்தது. இதேபோன்று நேற்று ஞாயிற்றுக்கிழமை தலிபான்கள் சண்டை எதுவுமின்றி கிழக்கின் முக்கிய நகரமான ஜலலாபாத்தை கைப்பற்றினர். இந்த நகரம் பாகிஸ்தான் நாட்டுக்கு செல்வதற்கான அனைத்து வீதிகளையும் கட்டுப்படுத்துகின்றது.

நேற்றைய தினம் தலிபான்கள் காபூலை முற்றுகையிட்டு நின்றாலும் நகருக்குள் நுழைய அவர்களின் கட்டளைப் பீடத்தால் அனுமதி வழங்கப்பட்டிருக்கவில்லை. எனினும், மறைவாக இருந்த தலிபான்கள் அரச நிர்வாக அலுவலகங்களை தங்கள் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்திருந்தனர்.

இந்த நிலையில், அமெரிக்க இராஜதந்திரிகள் ஹெலிகொப்டரில் வெளியேறியமையை தொடர்ந்து தலிபான்கள் நேற்று மாலை தலைநகருக்குள் நுழைந்தனர்.

இதேசமயம், கைப்பற்றப்பட்ட பகுதிகளில் தலிபான்கள் மோசமான மனித உரிமைகள் மீறல்களில் ஈடுபட்டுள்ளனர். திருமணமாகாத பெண்களை தங்கள் போராளிகளுக்கு மனைவிகளாக்குமாறு அவர்கள் மிரட்டுகின்றனர். முகத்தை மறைக்கும் புர்கா அணியாத பெண்கள் கடுமையாக தாக்கப்படுகின்றனர் என்றும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

(ஐ)



## ஜப்பானில் பெரு வெள்ளம்: 10 இலட்சம் பேர் இடப்பெயர்வு

ரோக்கியோ, ஓக. 16

ஜப்பானில் கனமழையால் நாட்டின் பல பகுதிகளில் வெள்ளம், நிலச்சரிவுகள் ஏற்பட்டுள்ளன. இதனால் 10 இலட்சத்துக்கும் அதிகமானோர் இடம்பெயர்ந்துள்ளனர்.

ஜப்பானின் கிழக்குப் பகுதிகளில் கடந்த சில நாட்களாக கனமழை நீடித்தது காரணமாக நாட்டின் பல பகுதிகளில் வெள்ளம் பெருக்கெடுத்து ஓடுகிறது. பல வீதிகள் துண்டிக்கப்பட்டுள்ளன. நிலச்சரிவுகளும் ஏற்பட்டுள்ளன.

கியுஷோ, ஹிரோஷிமா ஆகிய பகுதிகளில் அவசர நிலை பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது. பல இடங்களில் மின்சாரம் தடைபட்டுள்ளது. சுமார் 10 இலட்சத்துக்கும் அதிகமான மக்கள் வெள்ளம் காரணமாக இடம்பெயர்ந்துள்ளனர். வெள்ளம் காரணமாக இதுவரை 3 பேர் பலியாகி உள்ளனர். மீட்புப் பணிகள் தொடர்ந்து நடைபெற்று வருகிறது எனத் தெரிய வருகின்றது. (ஐ)

## எரிபொருள் தாங்கி வெடித்து 20 பேர் மரணம்; பலர் காயம்!

பெய்ரூட், ஓக. 16

லெபனானில் நேற்று அதிகாலை எரிபொருள் தாங்கி வாகனம் ஒன்று வெடித்து சிதறியதில் 20 பேர் உயிரிழந்தனர். பல பேர் காயமடைந்துள்ளனர் என்று அந்த நாட்டின் செஞ்சிலுவை சங்கம் தெரிவித்துள்ளது.

வெடிப்புக்கான காரணம் என்பது குறித்து உடனடியாகத் தெரியவில்லை.

லெபனான் செஞ்சிலுவைச் சங்கம், அதன் குழுக்கள் வடக்கு கிராமமான டிலெயில் வெடிப்பு இடம்பெற்ற இடத்தில் இருந்து 20 உடல்களை மீட்டதாகவும் எனவும் குண்டுவெடிப்பில் காயமடைந்த அல்லது தீக்காயமடைந்த 79 பேரை மீட்டுள்ளதாகவும் கூறியுள்ளது. (ஐ)





## ஹெய்ட்டியில் நிலநடுக்கம்: 304 பேர் பலி; 1,800 பேர் காயம்!

போர்ட் அவு பிறின்ஸ், ஓக. 16

ஹெய்ட்டியில் நேற்று முன்தினம் இடம்பெற்ற நிலநடுக்கத்தில் குறைந்தது 304 பேர் உயிரிழந்தனர். ஆயிரத்து 800இற்கும் மேற்பட்டவர்கள் காயமடைந்தனர் என்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

7. 2 ரிக்டர் அளவில் இடம்பெற்ற இந்த நிலநடுக்கத்தால் பெரும் கட்டடங்கள் யாவும் இடிந்து வீழ்ந்தன. உயிரிழந்தவர்கள், காயமடைந்தவர்கள் போக ஏராளமானவர்கள் இந்த இடிபாடுகளுக்குள் சிக்கியுள்ளனர். இதனால், உயிரிழப்புகள் மேலும் அதிகரிக்கலாம் என்று அஞ்சப்படுகின்றது.

நிலநடுக்க மையப்புள்ளி சென். லூயிஸ் டு தென் நகரத்திலிருந்து 12 கிலோமீற்றர் தூதரத்தில் இருந்ததாக அமெரிக்க புவியியல் ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. அத்துடன், நாட்டின் பல பகுதிகளில் இந்த நிலநடுக்கத்தின் அதிர்வுகள் உணரப்பட்டன. இந்நிலையில் பேரழிவை எதிர்கொண்டுள்ள ஹெய்டிக்கு உடனடி உதவிகளை வழங்க சர்வதேச நாடுகள் முன்வந்துள்ளன. (ஐ)




# அண்டர்சன் புதிய மைல்கல்!

லண்டன், ஒக. 16

லண்டனில் நடந்து வரும் இந்திய அணிக்கு எதிரான இரண்டாவது டெஸ்ட் போட்டியில்இங்கிலாந்து வேகப்பந்துவீச்சாளர் அண்டர்சன் 31ஆவது முறையாக 5 விக்கெட்களை வீழ்த்தி சாதனை படைத்துள்ளார்.

1951ஆம் ஆண்டுக்குப்பின் டெஸ்ட் கிரிக்கெட்டில் மிகஅதிகமான வயதில் 5 விக்கெட்களை வீழ்த்திய முதல் பந்துவீச்சாளர் அண்டர்சன் என்பது குறிப்பிடத்தக்கது. அவர், தனது 39ஆவது வயது 14 நாட்களில் இந்த சாதனையைச் செய்துள்ளார். இதற்கு முன் ரிச்சார்ட் ஹாட்லி 39வயதில் இந்த சாதனையைச் செய்திருந்தார்.

எனினும், அவுஸ்திரேலியாவின் பெர்ட் அயன்மங்கர் தனது 49 வயது 313 நாட்களில் தென்னாபிரிக்காவுக்கு எதிராக 1932ஆம் ஆண்டில் மெல்பர்னில் நடந்த டெஸ்ட் போட்டியில் இரு இன்னிங்ஸ்களிலும் 5 விக்கெட்களை வீழ்த்தியதே சாதனையாக உள்ளது.

லார்ட்ஸ் மைதானத்தில் இந்திய அணிக்கு எதிராக 5 முறை இங்கிலாந்து அணியில் அண்டர்சன் களமிறங்கியுள்ளார். இதில் 4 முறை 5 விக்கெட்களை அண்டர்சன் வீழ்த்தியுள்ளார். ஒரே மைதானத்தில்இந்திய அணிக்கு எதிராக அதிகமான முறை 5 விக்கெட்களை வீழ்த்தியவர் அண்டர்சன் மட்டும் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

## ஜோ ரூட் அபார ஆட்டம்:

# 2ஆவது இனிங்ஸில் இந்தியா தடுமாற்றம்

லண்டன், ஒக. 16

ஜோ ரூட்டின் அபார சதத்தால் இங்கிலாந்து அணி முன்னிலை பெற்றது. இரண்டாவது இனிங்ஸில் துடுப்பெடுத்தாடி வரும் இந்திய அணி நேற்று மதிய போசன இடைவேளைக்காக ஆட்டம் இடைநிறுத்தப்பட்டபோது 56 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்களை இழந்து தடுமாறியது.

இங்கிலாந்துக்கு சென்றுள்ள இந்திய அணி 5 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாடி வருகின்றது. நாணயச் சுழற்சியில் வென்ற இங்கிலாந்து முதலில் களத்தடுப்பில் ஈடுபட்டது.

முதல் இனிங்ஸில் ஆடிய இந்திய அணி 126.1 ஓவர்களில் சகல விக்கெட்களையும் இழந்து 364 ஓட்டங்களைப் பெற்றது.

பதிலுக்கு தனது முதல் இனிங்ஸில் துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்து அணிக்கு அணித் தலைவர் ஜோ ரூட் 180 ஓட்டங்களை ஆட்டமிழக்காமல் பெற்றார். அத்துடன், பெயர்ஸ்ரோ 57, பேர்ண்ஸ் 49 ஓட்டங்களை அதிகபட்சமாகப் பெற்றனர்.




128 ஓவர்களில் அந்த அணி சகல விக்கெட்களையும் இழந்து 391 ஓட்டங்களைப் பெற்று 27 ஓட்டங்களால் முன்னிலை பெற்றது.

இந்தியாவின் பந்துவீச்சில் சிராஜ் 4, இஷாந்த் சர்மா 3 விக்கெட்களைக் கைப்பற்றினர்.இந்நிலையில், நான்காம் நாளான நேற்று இந்தியா துடுப்பெடுத்தாட ஆரம்பித்தது.

தொடக்கம் கொடுத்த கே. எல். ராகுல் 5, ரோஹித் சர்மா இணை 21 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தனர். நான்காவது வீரராக வந்த அணித் தலைவர் கோலி 20 ஓட்டங்களை எடுத்த நிலையில் விக்கெட்டை பறிகொடுக்க மதிய போசனத்திற்காக ஆட்டம் இடைநிறுத்தப்பட்டபோது இந்திய அணி 25 ஓவர்கள் நிறைவில் 3 விக்கெட்கள் இழப்புக்கு 56 ஓட்டங்களைப் பெற்றிருந்தது.

புஜாரா 3, ரஹானே 1 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்காமல் இருந்தனர்.

இன்று போட்டியின் இறுதிநாள் ஆட்டமாகும். (ஐ)

# ஐ.பி.எல்லில் விளையாட ஆஸி. வீரர்களுக்கு அனுமதி

சிட்னி, ஒக. 16

ஐக்கிய அரபு அமீரகத்தில் செப்ரெம்பர் மாதம் நடைபெறவுள்ள ஐ.பி.எல். இருபது - 20 தொடரின் 2ஆவது பகுதியில் அவுஸ்திரேலிய வீரர்கள் பங்கேற்க அந்நாட்டு கிரிக்கெட் சபைஅனுமதி வழங்கியுள்ளது.

ஒக்ரோபரில் இருபது - 20 உலகக்கிண்ணப் போட்டி நடைபெற இருப்பதால், அதற்கான பயிற்சிக் களமாக ஐ.பி.எல். இருபது - 20 தொடர் இருக்கும் என்பதால், அனுமதியளிக்கப்பட்டுள்ளது.

இதேநேரம், ஆப்கானிஸ்தான், மே.இ.தீவுகள் அணிகளுடன் இருபது - 20 தொடரை அடுத்த மாதம் விளையாட அவுஸ்திரேலிய அணி திட்டமிட்டுள்ளது. ஐ.பி.எல். தொடர் இருப்பதால், உலகக் கிண்ணத் தொடருக்கு முன்பாக இரு தொடர்களையும் பயிற்சி ஆட்டமாக மாற்றவும் அவுஸ்திரேலிய கிரிக்கெட் சபை திட்டமிட்டு வருகிறது.

இந்தியாவில் நடந்த ஐ.பி.எல். தொடர் கொரோனா தொற்று காரணமாக பாதியிலேயே நிறுத்தப்பட்டது. இதையடுத்து, 2ஆவது பாதியை ஐக்கிய அரபு அமீரகத்தில் நடத்த முடிவு செய்யப்பட்டிருப்பது தெரிந்ததே. (ஐ)




# பங்களாதேஷ் பயிற்றுநராக தென்னாபிரிக்காவின் பிரின்ஸ்

டாக்கா, ஒக. 16

பங்களாதேஷ் கிரிக்கெட் அணியின் துடுப்பாட்ட ஆலோசகராக தென்னாபிரிக்காவின் முன்னாள் துடுப்பாட்ட வீரர் அஷ்வெல் பிரின்ஸ் நியமிக்கப்பட்டுள்ளார்.

பங்களாதேஷ் தேசிய அணியின் துடுப்பாட்ட பயிற்றுவிப்பாளராக நிரந்தர பொறுப்பை ஏற்க அஷ்வெல் பிரின்ஸ், தென்னாபிரிக்காவின் மேற்கு மாகாண அணியின் தலைமை பயிற்றுவிப்பாளர் பதவியை ராஜினாமா செய்தார்.

எதிர்வரும் ஒக்ரோபர்-நவம்பர் மாதங்களில் அவுஸ்திரேலியாவில் நடைபெறும் 2022 இருபது -20 உலகக் கிண்ண இறுதி வரை அவர் பங்களாதேஷ் அணியின் முழுநேர துடுப்பாட்ட ஆலோசகராக செயல்படுவார்.

2002 - 2011 காலப்பகுதியில் தென்னாபிரிக்காவுக்காக 66 டெஸ்ட், 52 ஒருநாள் மற்றும் ஒரு இருபது -20 போட்டிகளில் விளையாடியுள்ளார் அஷ்வெல் பிரின்ஸ். (ஐ)

# லா லிகா உதைபந்தாட்டம்: வலென்சியா அணி வெற்றி!

மட்ரிட், ஒக. 16

ஸ்பெயினின் லா லிகா உதைபந்தாட்ட போட்டியின் 91ஆவது சீசன் தொடங்கியுள்ளது. அதன் முதல் ஆட்டத்தில் வலென்சியா 1-0 என்ற கோல் கணக்கில் கடாபியை வீழ்த்தியது.

மட்ரிட் நகரில் சனிக்கிழமை நடைபெற்ற இந்த ஆட்டத்தில் 3ஆவது நிமிடத்திலேயே வலென்சியா வீரர் ஹியுகோ குய்லாமோன் சிவப்பு அட்டை காட்டப்பட்டு வெளியேற்றப்பட, எஞ்சிய நேரத்தில் 10 வீரரகளுடன் ஆடினாலும் வெற்றியை பதிவு செய்தது அந்த அணி.

ஆட்டத்தின் 11ஆவது நிமிடத்தில் வலென்சியாவுக்கு கிடைத்த தண்டனை உதை வாய்ப்பை காரலோஸ் சோலர் கோலாக மாற்றினார்.




அந்த முன்னிலையை இறுதிவரை தக்கவைத்துக் கொண்டது வலென்சியா. ஆட்டத்தின் 81ஆவது நிமிடத்தில் ஆட்டத்தை சமன் செய்யும் வாய்ப்பு கடாஃபிக்கு கிடைக்க, அந்த அணியின் மௌரோ அரம்பாரி அடித்த பந்து கோல் கம்பத்தில் பட்டு வீணானது.

அதே நிமிடத்தில் 2ஆவது முறையாக கடாஃபி வீரர் எரிக் கபாகோவுக்கு மஞ்சள் அட்டை காட்டப்பட்டு வெளியேற்றப்பட்டதால், அந்த அணியும் 10 வீரர்களுடன் ஆடும் நிலை ஏற்பட்டது. இறுதி வரை கடாபிக்கு கோல் வாய்ப்பு வழங்காத வலென்சியா, முதல் வெற்றியை பதிவு செய்தது. இந்த ஆட்டத் தைக் காண மைதானத்தில்10,000 ரசிகர்கள் அனுமதிக்கப்பட்டிருந்தனர். (ஐ)

# இந்திய தூதரகம் நடத்திய கட்டுரை போட்டியில் பரிசு பெற்றவர்கள்

யாழ்ப்பாணம், ஓக. 16

இந்திய சுதந்திர தினத்தை முன்னிட்டு நடத்தப்படும் 'ஆசாதிகா அம்ரித் மஹோத்ஸவ்' கொண்டாட்டத்தின் ஒரு பகுதியாக, இந்தியத் துணைத் தூதரகமானது, வடக்கு மாகாண கல்வி, கலாசார அலுவல்கள், விளையாட்டு மற்றும் இளைஞர் விவகார அமைச்சகத்துடன் இணைந்து, வடக்கு மாகாணத்தில் உள்ள ஐந்து மாவட்டங்களிலும் உள்ள மாணவர்களுக்கான கட்டுரைப் போட்டியை இணைய வழியில் நடத்தியது.

வடக்கு மாகாணத்தில் உள்ள ஐந்து மாவட்டங்களிலும் இருந்து முதல் மூன்று இடங்களுக்கும் தெரிவு செய்யப்பட்ட 15 வெற்றியாளர்களுக்கும் மொத்தம் 75 ஆயிரம் ரூபா பரிசுத் தொகை அறிவிக்கப்பட்டது. தெரிவு செய்யப்பட்ட வெற்றியாளர்களுக்கான பணப் பரிசில்களை, இந்தியத் துணைத் தூதுவர் ராகேஷ் நட்ராஜ் வேறோரு சந்தர்ப்பத்தில் நடைபெறும் விழாக்களில் நேரடியாக வழங்குவார். அமைச்சகத்தால் தெரிவு செய்யப்பட்ட வெற்றியாளர்களின் விவரங்கள்:-

**யாழ்ப்பாணம் மாவட்டம்**

முதலாம் இடம்:- செல்வி அனோஜிகா (தரம் 13, சிவகுமார் யா/இந்து மகளிர் கல்லூரி), இரண்டாம் இடம்:- செல்வி கம்சிகா கஜேந்திரன் (தரம் 13, யா/வயாவிளான் மத்திய கல்லூரி), மூன்றாம் இடம்:- செல்வி சுவஸ்திகா சர்வேஸ்வரன் (தரம் 12, யா/யூனியன் கல்லூரி)

**கிளிநொச்சி மாவட்டம்**

முதலாம் இடம்:- செல்வி குமார் கிருஷாந்தி (தரம் 12, கிளி/இராமநாதபுரம் மகாவித்தியாலயம்), இரண்டாம் இடம்:- செல்வி சுப்ரமணியம் பபிதா (தரம் 13, கிளி/கிளிநொச்சி இந்துக் கல்லூரி), மூன்றாம் இடம்:- செல்வி சுதாகரன் சுவேதிகா (தரம் 12, கிளி/இராமநாதபுரம் மகா வித்தியாலயம்)

**முல்லைத்தீவு மாவட்டம்**

முதலாம் இடம்:- செல்வி சுப்ரமணியம் சுடர்ச்செல்வி (தரம் 13, மு/புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி), இரண்டாம் இடம்:- செல்வி மயில்வாசன் தினேகா (தரம் 13, மு/யோகபுரம் மகாவித்தியாலயம்), மூன்றாம் இடம்:- செல்வி சசிகுமார் ஷர்மிகா (தரம் 13, மு/உடையார்கட்டு மகாவித்தியாலயம்)

**மன்னார் மாவட்டம்**

முதலாம் இடம்:- செல்வி றசிக்குமார் சசிகலா (தரம் 11, மன்/முருங்கன் மகா வித்தியாலயம்), இரண்டாம் இடம்:- செல்வி டியோன்மேரி (தரம் 11, யுஜிதா மன்/முருங்கன் மகா வித்தியாலயம்),

மூன்றாம் இடம்:- செல்வி சுதாகரன் சுதர்ஷிகா (தரம் 11, மன்/முருங்கன் மகா வித்தியாலயம்)

**வவுனியா மாவட்டம்**

ஷமுதலாம் இடம்:- செல்வி மோகனப்பிரதா கோணேஷ்வரன் (தரம் 12, வவு/சைவப் பிரகாச மகளிர் கல்லூரி), இரண்டாம் இடம்:- செல்வி குமுதினி பாலையா (தரம் 13, வவு/பூந்தோட்டம் மகா வித்தியாலயம்), மூன்றாம் இடம்:- செல்வி ஞா. ரஜீந்தினி (தரம் 12, வவு/புதுக்குளம் மகா வித்தியாலயம்)



# நான்கு அமைச்சர்கள் அதிரடியாக மாற்றம்?

## 'மொட்டு' தகவல் தெரிவிப்பு

கொழும்பு, ஓக.16

**அமைச்சரவை மறுசீரமைப்பு நாளை இடம்பெறவுள்ளது எனவும், நான்கு அமைச்சுக்களில் மாத்திரம் மாற்றம் இடம்பெறவுள்ளது எனவும் தெரியவருகின்றது.**

இதன்படி அமைச்சர்களான பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ், தினேஷ் குணவர்தன, டலஸ் அழப்பெரும மற்றும் கெஹலிய ரம்புக்வெல் ஆகியோரின் அமைச்சுக்களில் மாற்றம் செய்யப்படவுள்ளன என்று ஆளும் கட்சியான ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் தகவல்களிலிருந்து அறிய முடிகின்றது.

வெளிவிவகார அமைச்சர் தினேஷ் குணவர்தன கல்வி அமைச்சராகவும், தற்போதைய கல்வி அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ் வெளிவிவகார அமைச்சராகவும், ஊடகத்துறை அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல மின்சக்தி அமைச்சராவும், தற்போதைய மின்சக்தி அமைச்சர் டலஸ் அழப்பெரும ஊடகத்துறை அமைச்சராகவும் நியமிக்கப்படுவர் எனவும் தெரியவருகின்றது.

அதேவேளை, சுகாதார அமைச்சுப் பதவியில் மாற்றம் இடம்பெறாது எனவும், பவித்ரா வன்னியாராச்சியே அப்பதவியில் நீடிப்பார் எனவும் தகவல் வெளியாகியுள்ளது. (இ)

# கம்பஹாவில் 24 மணிநேரத்தில் 2 ஆயிரம் பேருக்கு கொரோனா

கம்பஹா, ஓக. 16

கம்பஹா மாவட்டத்தில் நேற்று காலை வரையான 24 மணித்தியாலங்களில் கொரோனாத் தொற்றாளர்கள் எண்ணிக்கை 2 ஆயிரத்தைக் கடந்துள்ளது என மாவட்ட சுகாதார சேவைகள் பணிப்பாளர் காரியாலயம் நேற்றுக் காலை தெரிவித்துள்ளது.

குறித்த மாவட்டத்தில், 24 மணித்தியாலங்களில் 2 ஆயிரத்து 270 தொற்றாளர்கள் இனங்காணப்பட்டுள்ளனர்.

மாவட்டத்தின் 15 சுகாதார பிரிவுகளில் தொம்பே சுகாதாரப் பிரிவுகளிலேயே அதிகளவான தொற்றாளர்கள் இனங்காணப்பட்டுள்ளனர். தொம்பே சுகாதாரப் பிரிவில் 329 தொற்றாளர்கள் இனங்காணப்பட்டுள்ளனர்.

மஹர பிரிவில் 244 தொற்றாளர்களும், பியகம பிரிவில் 210 தொற்றாளர்களும், வத்தளை பிரிவில் 203 தொற்றாளர்களும், கம்பஹா பிரிவில் 181 தொற்றாளர்களும், மீரிகம பிரிவில் 160 தொற்றாளர்களும், கட்டான பிரிவில் 139 தொற்றாளர்களும், மினுவாங்கொடை பிரிவில் 135 தொற்றாளர்களும், திவுலப்பிட்டி பிரிவில் 133 தொற்றாளர்களும், ராகம பிரிவில் 131 தொற்றாளர்களும், ஜாஎல பிரிவில் 117 தொற்றாளர்களும், களனி பிரிவில் 113 தொற்றாளர்களும், அத்தனகல்ல பிரிவில் 100 தொற்றாளர்களும், நீர்கொழும்பு பிரிவில் 42 தொற்றாளர்களும், சீதுவை பிரிவில் 33 தொற்றாளர்களும் இனங்காணப்பட்டுள்ளனர்.

குறித்த மாவட்டத்தில் ஆடைத் தொழிற்சாலை தொற்றாளர்கள் 66 பேர் இனங்காணப்பட்டுள்ளனர். கட்டுநாயக்க வலயத்தில் 59 தொற்றாளர்களும், பியகம வலயத்தில் 7 தொற்றாளர்களும் இனங்காணப்பட்டுள்ளனர். (இ)



# போலி நாணயத்தாள்களுடன் இருவர் வசமாக மாட்டினார்கள்

கொழும்பு, ஓக. 16

கிராண்ட்பாஸ், வெல்லம்பிட்டி மற்றும் ஒருகொடவத்த ஆகிய பிரதேசங்களில் மேற்கொள்ளப்பட்ட விசேட சோதனை நடவடிக்கையின் போது போலிநாணயத்தாள்களுடன் இருவர் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்தார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

"போலி நாணயத்தாள்களை அச்சிட்டமை மற்றும் அதனைப் பரிமாற்றம் செய்த குற்றச்சாட்டுகளின் கீழ் குறித்த இருவரும் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

இதன்போது 100 ரூபாய் பெறுமதியான 25 போலி நாணயத்தாள்களையும், 500 ரூபாய் பெறுமதியான 18 நாணயத்தாள்களையும், 1,000 ரூபாய் பெறுமதியான ஒரு நாணயத்தாளையும் பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

அதேவேளை, போலி நாணயத்தாள்கள் அச்சிடப் பயன்படுத்தப்பட்ட மடிக்கணனி ஒன்றையும் ஏனைய பல பொருட்களையும் பொலிஸார் இதன் போது கைப்பற்றியுள்ளனர்.

சந்தேகநபர்கள் விசாரணைகளின் பின்னர் கொழும்பு நீதிவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்படவுள்ளனர்.

இது தொடர்பில் கிராண்ட்பாஸ் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்" - என்றார். (இ)

# உயர்தர மாணவர்கள் மூவர் நீரில் மூழ்கி பரிதாப மரணம்

மொனராகலை, ஓக. 16


மொனராகலை மாவட்டம், புத்தள கட்டுகஹகல்கே வாவியில் நேற்று நீரில் மூழ்கி மூன்று மாணவர்கள் உயிரிழந்துள்ளனர். அவர்களின் சடலங்கள் நேற்று மீட்கப்பட்டுள்ளன என்று பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

இம்முறை ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சைக்கு தோற்றவிருந்த மாணவர்களே இவ்வாறு நீரில் மூழ்கி மரணமடைந்துள்ளனர்.

மூவரும் மொனராகலை மஹனாம தேசிய பாடசாலையில் கல்வி கற்று வந்தவர்களாவர்.

மொனராகலை பட்டுகம்மன பிரதேசத்தைச் சேர்ந்த ஆரம்.எம்.தனஞ்சய தேஷான் (வயது 18), மொனராகலை சிறிகல மற்றும் ரத்தனப்பிட்டிய ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்த டி.பி.ரந்தீப தாரக்க (வயது 18), கோரள கமகே இமேஷ் (வயது 18) ஆகியோரே இவ்வாறு மரணமடைந்துள்ளனர்.

மூவரும் தமது நண்பர்களைப் பார்வையிடுவதற்காக நேற்றுமுன்தினம் வீடுகளிலிருந்து மோட்டார் சைக்கிளில் சென்றுள்ளனர் என்றும், மாலை வரை வீடு திரும்பாததன் காரணமாக பெற்றோர் அவர்களது தொலைபேசிக்கு அழைப்பை ஏற்படுத்தியுள்ளனர் என்றும் தெரியவருகின்றது.



தொலைபேசி அழைப்புகள் செயலிழந்துக் காணப்பட்டதால் குறித்த மாணவர்களில் ஒருவரின் பெற்றோர் பொலிஸ் நிலையத்துக்குச் சென்று முறைப்பாடு செய்துள்ளார்.

இந்நிலையில், புத்தள படல்கும்புர வீதி, கட்டுகஹகல்கே வாவிக்கு அருகில் இரண்டு மோட்டார் சைக்கிள்கள், தொலைபேசிகள் மற்றும் ஆண்கள் அணியும் ஆடைகள் காணப்படுகின்றன என்று மீனவர்கள் சிலர் புத்தள பொலிஸாருக்கு வழங்கிய தகவலுக்கு அமைவாக பொலிஸார் குறித்த இடத்துக்கு வந்து பிரதேச மக்களின் உதவியுடன் தேடிப் பார்த்தபோதே குறித்த மூவரும் நீரில் மூழ்கி உயிரிழந்தமை தெரியவந்துள்ளது.

குறித்த மூவரும் வாவியில் நீராடிக்கொண்டிருந்ததை பிரதேச மக்கள் அவதானித்துள்ள னர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

மூவரின் சடலங்களும் பிரேத பரிசோதனைக்காக வைத்திய சாலையில் வைக்கப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (இ)

## 12 வயதுக்கு...

படும் எனவும் பிரதமர் தெரிவித்தார்.

அம்பாந்தோட்டை வைத்தியசாலையில் நிறுவப்பட்டுள்ள தென் மாகாண கோவிட்-19 சிறுவர் சிகிச்சை பிரிவை திறந்து வைக்கும் நிகழ்வில் தங்காலை கால்டன் இல்லத்திலிருந்து காணொலி தொழில்நுட்பம் ஊடாக இணைந்து கொண்ட போதே பிரதமர் இவ்வாறு குறிப்பிட்டார்.

பிரதமரின் பாரியார் திருமதி ஷிராந்தி ராஜபக்ஷ சம்பிரதாய முறைப்படி விளக்கேற்றி அம்பாந்தோட்டை வைத்தியசாலையில் நிறுவப்பட்டுள்ள தென் மாகாண கோவிட்-19 சிறுவர் சிகிச்சை பிரிவை திறந்துவைத்தார். அதனை தொடர்ந்து மருத்துவர்கள் உள்ளிட்ட தாதியர்களுடன் கண்காணிப்பிலும் ஈடுபட்டார்.

அம்பாந்தோட்டை வைத்தியசாலையில் கொவிட் சிகிச்சை நடவடிக்கைகள் 2020ஆம் ஆண்டு மார்ச் மாதம் ஆரம்பிக்கப்பட்டது. அன்று முதல் இதுவரை சுமார் 6000 பேருக்கு சிகிச்சை அளிக்கப்பட்டுள்ளது. கோவிட் தொற்றுக்கு உள்ளாகும் சிறுவர்களுக்கு இதுவரை மகளிர் வார்டு வளாகத்திலேயே சிகிச்சையளிக்கப்பட்டு வந்தது.புதிய பிரிவு நிறுவப்பட்டதன் ஊடாக சிறுவர்கள் தொடர்பாக விசேட கவனம் செலுத்த முடியும் என மருத்துவர்கள் தெரிவித்தனர். கோவிட்-19 சிறுவர் சிகிச்சை பிரிவுகளை அனைத்து மாகாணங்களிலும் நிறுவுவதே சிறுவர் வைத்திய நிபுணர்கள் சங்கத்தின் எண்ணக்கருவாகவுள்ளது.

குறித்த நிகழ்வில் காணொலி தொழில்நுட்பம் ஊடாக இணைந்து கொண்டு பிரதமர் ஆற்றிய உரை வருமாறு,

"இந்த தொற்று ஏற்பட்ட போது பிள்ளைகளின் பாதுகாப்பை கருத்திற்கொண்டு முதலில் பாடசாலைகளை மூடினோம். அவ்வப்போது ஆபத்து குறைந்த போதிலும் நாம் பாடசாலைகளை திறக்கவில்லை என்பது உங்களுக்கு நினைவிருக்கும்.எனினும், இவ்வாறு பாடசாலைகளை மூடி வைத்திருக்கு எமக்கு விருப்பம் இல்லை.

ஏனெனில் கல்வி மாத்திரமன்றி கல்விக்கு அப்பாற்பட்ட அறிவும் பாடசாலைகளில் புகட்டப்படுகின்றது. பாடசாலைகளில் ஆசிரியர்கள் எமக்கு வாழ்க்கையையும் கற்பிக்கின்றனர். அது இன்றைய நாளைவிட எதிர்காலத்திற்கே உதவும். அதனால் அதிபர்கள், ஆசிரியர்கள், கல்வி சாரா ஊழியர்கள் ஆகியோருக்கு தடுப்பூசி வழங்கப்பட்ட பின்னர் 12 வயதிற்கு மேற்பட்ட சிறுவர்களுக்கு கட்டம் கட்டமாக தடுப்பூசி வழங்க அரசாங்கம் திட்டமிட்டுள்ளது. அதன்போது பல்வேறு பிரச்சினைகள் உள்ள பிள்ளைகளுக்கு முன்னுரிமை வழங்கவும் எதிர்பார்க்கப்படுகிறது.

எமக்கு மட்டுமின்றி உலகின் பல அபிவிருத்தி அடைந்த நாடுகளுக்கும் இந்த தொற்றை கட்டுப்படுத்துவது ஒரு சவாலாக காணப்படுகிறது. தடுப்பூசி வழங்கலின் மூலம் உயிர் ஆபத்துகளை தடுத்து நோய் பரவலை கட்டுப்படுத்துவதே தற்போதுள்ள ஒரே தீர்வாகும். நாம் ஒரு நாடு என்ற ரீதியில் தடுப்பூசி ஏற்றும் செயற்பாட்டில் மிகவும் முன்னணியில் காணப்படுகின்றோம். எனினும், இதனை மேலும் துரிதப்படுத்தி மக்களின் உயிரை காக்க வேண்டும். அதற்காகவே நாம் முன்னுரிமை வழங்குகின்றோம்." எனவும் பிரதமர் தெரிவித்தார்.

## கோப்பாயில்...

இந்த விபத்து நேற்று காலை 10.30 மணியளவில், கோப்பாய் சந்தியிலிருந்து சுமார் 100 மீற்றர் தொலைவில் கைதடி வீதியில் இடம்பெற்றது.

இதில் சித்தன்கேணியை சேர்ந்த தருனேஷ் சாந்தி (வயது 35) என்பவரே பலியானார். இவர் கல்வி திணைக்களத்தில் அபிவிருத்தி உத்தியோகத்தராவார். அவரின் கணவர் இளவாலை பொலிஸ் நிலையத்தில் பொலிஸ் உத்தியோகத்தராகப் பணியாற்றுகிறார்.

இந்த விபத்தில் அவரின் கணவரும் சிறு காயங்களுக்கு இலக்காகியிருந்தார்.

சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருபவை வருமாறு,

குறித்த பெண் கணவருடன் மாமியார் வீட்டுக்கு மோட்டார் சைக்கிளில் சென்று கொண்டிருந்தார். அச்சமயம், மோட்டார் சைக்கிளின் பின்னால் வந்த டிப்பர் வாகனம் இவர்களை முந்த முற்பட்டது. அப்போது, மோட்டார் சைக்கிளுடன் டிப்பர் உரசியதில் நிலை தடுமாறி மோட்டார் சைக்கிளில் சென்றவர்கள் விழுந்தனர்.

மோட்டார் சைக்கிளின் பின்னிருக்கையில் இருந்த பெண் வீதியில் விழவே, அவரின் தலை மீது டிப்பர் சில்லு ஏறியது. இதில் தலை சிதறி சம்பவ இடத்திலேயே அந்தப் பெண் உயிரிழந்தார்.

டிப்பர் சாரதி கைது செய்யப்பட்டு கோப்பாய் பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ளார். சம்பவம் தொடர்பில் விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

## நாட்டை முடக்க...

வரையில் அவ்வாறான பரிந்துரைகள் முன்வைக்கப்படவில்லை."

- இவ்வாறு இராஜாங்க அமைச்சர் பேராசிரியர் சன்ன ஜயசுமண தெரிவித்தார்.

நேற்று ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

"கொரோனா வைரஸ் தொற்றுப் பரவலைக் கட்டுப்படுத்தும் வகையில் தொற்று நோய் ஆய்வுப் பிரிவு, கொரோனாத் தடுப்புச் செயலணி ஆகியன செயற்படுகின்றன. அதற்கு வெளியே பல்வேறு ஆய்வு நிறுவனங்கள், தொழிற்சங்கங்கள் என்பனவும் உள்ளன. அவற்றின் பரிந்துரைகளைச் செயல்படுத்துவதற்கு அரசு நடவடிக்கை எடுக்கும்.

எவ்வாறாயினும் நாட்டை முடக்கும் விடயத்தில் சுகாதாரத்துறை நிபுணர்கள் உத்தியோகபூர்வமாக எங்களுக்கு ஆலோசனை வழங்க வேண்டும். அவற்றை வழங்கினால் அதனை உடனே செயற்படுத்த அரசு பின்வாங்காது" - என்றார். (இ)

## யாழ்ப்பாணத்தில்...

வில் 14 பேரும், யாழ். போதனா மருத்துவமனையில் 13 பேரும், கோப்பாய் பிரதேச மருத்துவமனையில் 9 பேரும், சாவகச்சேரி ஆதார மருத்துவமனையில் 7 பேரும், நல்லூர் மருத்துவ அதிகாரி பிரிவில் ஒருவரும் என 70 பேர் தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டனர்.

வவுனியா மாவட்டத்தில், செட்டிக்குளம் ஆதார மருத்துவமனையில் 10 பேருக்கும், பூவரசன்குளம் பிரதேச மருத்துவமனையில் நால்வருக்கும், வவுனியா பொது மருத்துவமனையில் இருவருக்கு மென 16 பேருக்கு தொற்று உறுதி செய்யப்பட்டது.

கிளிநொச்சி மாவட்டத்தில், அக்கராயன்குளம் பிரதேச மருத்துவமனையில் 7 பேருக்கும், கிளிநொச்சி பொது மருத்துவமனையில் 4 பேருக்குமாக 11 பேருக்கு தொற்று உறுதிப்படுத்தப்பட்டது.

முல்லைத்தீவு பொது மருத்துவமனையில் இருவருக்கும், மன்னார் பொது மருத்துவமனையில் இருவருக்கும் தொற்று உறுதி செய்யப்பட்டது.

தவிர, காங்கேசன்துறை கடற்படைதளத்தில் ஒருவருக்கும், பலாலி தனிமைப்படுத்தல் முகாமில் ஒருவருக்கும் தொற்று உறுதப்படுத்தப்பட்டது. (ஐ)

## மேலும் 161 பேர்...

களின் மொத்த எண்ணிக்கை 6 ஆயிரத்து 96 ஆக அதிகரித்துள்ளது.

நேற்றுமுன்தினம் உயிரிழந்த 161 பேரில் 83 ஆண்களும், 78 பெண்களும் உள்ளடங்குகின்றனர்.

இதில் ஒரு பெண் 30 வயதுக்குட்பட்டவர். 22 ஆண்கள், 16 பெண்கள் என 38 பேர் 30 - 59 வயதுக்கு இடைப்பட்டவர்களாவர். 122 பேர் 60 வயதுக்கு மேற்பட்டவர்களாவர். இதில் 61 ஆண்களும், 61 பெண்களும் அடங்குகின்றனர். (இ)

# இரத்த தானம் செய்யுமாறு மக்களிடம் வேண்டுகோள்!

கொழும்பு, ஓக. 16

கொரோனா வைரஸ் தொற்றாளர்களுக்கு இரத்தம் வழங்குவதில் ஏற்பட்டுள்ள பற்றாக்குறையை ஈடுசெய்வதற்காக சுகாதார நடைமுறைகளுக்கு ஏற்ப இரத்த தானம் செய்ய முன்வருமாறு தேசிய இரத்த மாற்ற சேவையின் பணிப்பாளர் மருத்துவர் லக்ஷ்மன் எதிரிசிங்க கோரிக்கை விடுத்துள்ளார்.

கொரோனாத் தொற்று நெருக்கடி காரணமாக இரத்த தானம் வழங்கும் திட்டங்கள் இரத்துச் செய்யப்பட்டதன் காரணமாக நாட்டில் இரத்தப் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது என இரத்த மாற்ற சேவை நிறுவனம் தெரிவித்துள்ளது.

கர்பவதித் தாய்மார்கள், தலசீமியா நோயாளிகள், புற்றுநோயாளிகள், கொழும்பு தேசிய வைத்தியசாலையின் விபத்துப் பிரிவு மற்றும் லேடி ரிட்ஜ்வே சிறுவர் வைத்தியசாலை ஆகியவற்றுக்குத் தினமும் இரத்தம் தேவைப்படுகின்றது எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நாட்டின் முக்கிய வைத்தியசாலைகள் மற்றும் இரத்ததான நிலையங்களுக்குச் சென்று இரத்த தானம் வழங்க முடியும் எனவும் தேசிய இரத்த மாற்ற சேவை நிறுவனம் குறிப்பிட்டுள்ளது.

இத்தகைய இரத்த தானம் செய்பவர்களுக்கு நாரஹேன்பிட்டி இரத்த நிலையம் காலை 8 மணி முதல் மாலை 6 மணிவரையும், ராகம, மஹரகம, குருநாகல் மற் றும் அநுராதபுர வைத்தியசாலைகள் காலை 8 மணி முதல் மாலை 4 மணி வரை திறந்திருக்கும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அல்லது www.nbts.health என்ற இணையத்தளத்துக்குப் பிரவேசித்து இரத்த தானம் செய்வதற்கு எளிதான நேரத்தைப் பதிவு செய்து கொள்ளுமாறும் தேசிய இரத்த மாற்ற சேவை நிறுவனம் கேட்டுக்கொண்டுள்ளது. (இ)

# பயன்படுத்திய முகக்கவசங்களை குப்பையில் வீசாமல் எரியுங்கள்!

**பொது மக்களுக்கு பேராசிரியர் அறிவுறுத்து**

கொழும்பு, ஓக. 16

முகக் கவசங்களைப் பயன்படுத்திய பின்னர், அவற்றை குப்பைகளில் போட வேண்டாமென பேராசிரியர் அஜந்தா பெரேரா, முகக் கவசங்களை எரிக்க வேண்டும் எனவும் தெரிவித்தார்.

மேலும், நாட்டிலுள்ள அனைத்து மக்களும் முகக் கவசங்களை பயன்படுத்துகிறார்கள். பலர் ஒன்று அல்லது, இரண்டு தடவைகள் மாத்திரமே முகக் கவசத்தைப் பயன்படுத்துகிறார்கள் எனவும் தெரிவித்தார்.

பல மில்லியன் கணக்கான முகக் கவசங்கள் வீசப்படுகின்றன. பலர் எந்தவிதமான சுகாதாரப் பாதுகாப்பு வழிகாட்டல்களையும் பின்பற்றாது, முகக் கவசங்களை வீசி எறிகின்றனர். முகக் கவசங்களை வீசும்போது, அவற்றை கொதிக்கும் நீரில் அவித்துவிட்டு அல்லது கிருமி நாசினிக் கொண்டு அவற்றைக் கழுவி விட்டு அகற்ற வேண்டும்.

கண்ட இடங்களில் முகக் கவசங்களை பொதுமக்கள் வீசக்கூடாது. தங்களை மாத்திரம் முகக் கவசம் பாதுகாத்தால் போதுமென்ற மனநிலையில் இருக்கும் இலங்கையர்கள் பலர் முகக் கவசங்களை பயன்படுத்தியதன் பின்னர் கண்ட இடங்களில் வீசுகின்றனர். முகக் கவசங்களில் இருந்து கொரோனா வைரஸ் பரவுமென்பதால், சுகாதாரப் பாதுகாப்பு அறிவுத்தல்களுக்கு அமைய முகக் கவசங்களைப் பாதுகாப்பாக அகற்ற வேண்டும். அல்லது அவற்றை எரிக்க வேண்டும் - என்றார். (ஐ)

## டெல்டா உள்ளிட்ட...

கூறினார்.

இதன்போது அவர் மேலும் தெரிவித்ததாவது:-

"ஆபத்தான சூழ்நிலையை எதிர்கொள்ளப் பொதுமக்கள் தயாராக இருக்க வேண்டும். மிகவும் அவதானத்துடன் செயற்பட வேண்டும்.

பொதுமக்கள் அத்தியாவசிய தேவைகளின்றி வீட்டை விட்டு வெளியேறுவதைத் தவிர்க்க வேண்டும்.

நாட்டில் எதிர்வரும் இரண்டு வாரங்களுக்குள் கொரோனாவைக் கட்டுப்படுத்த வேண்டும். இல்லையேல் நிலைமை மிக மோசமாகிவிடும்" - என்றார். (இ)

## இரவு நேர...

நாட்டில் தினசரி 150-க்கு மேற்பட்ட கோவிட் 19 மரணங்கள் உறுதிப்படுத்தப்படுகின்றன. அத்துடன், தினசரி 3,000 இற்கு அதிகமாக தொற்று நோயாளர்கள் உத்தியோகபூர்வமாக உறுதிப்படுத்தப்படுகின்றனர். இந்நிலையில் நாட்டை முடக்காவிட்டால் மரணங்கள் விரைவில் தினசரி 250 வரை உயராலம் என எச்சரிக்கப்பட்டுள்ளது. இவ்வாறான நிலையிலேயே அழுத்தங்களைச் சமாளிக்க இரவு நேர ஊரடங்கு அமுல்படுத்தப்பட்டுள்ளது.

இன்று முதல் மறு அறிவித்தல் வரை இந்த இரவு நேர ஊரடங்கு நடைமுறையில் இருக்கும் எனவும், அத்தியவசிய சேவைகள் இதன்மூலம் பாதிக்கப்படாதிருப்பதை உறுதிப்படுத்துவதாகவும் இராணுவத் தளபதி மேலும் தெரிவித்தார்.

## நாளாந்தம் எகிறும்...

யாளம் காணப்பட்ட கொரோனாத் தொற்றாளர்களின் மொத்த எண்ணிக்கை 3 இலட்சத்து 54 ஆயிரத்து 968 ஆக அதிகரித்துள்ளது.

இதேவேளை, கொரோனாத் தொற்றால் பாதிக்கப்பட்ட மேலும் 2 ஆயிரத்து 387 பேர் குணமடைந்து நேற்று வீடு திரும்பியுள்ளனர்.

இதன்படி நாட்டில் கொரோனாத் தொற்றிலிருந்து குணமடைந்தவர்களின் மொத்த எண்ணிக்கை 3 இலட்சத்து 9 ஆயிரத்து 732 ஆக உயர்வடைந்துள்ளது. (இ)

## முகநூலில்...

ரணைக்கு உள்ளாக்கப்பட்டுள்ளார். அவிசாவளை வைத்தியசாலையின் நிலை தொடர்பாக முகப் புத்தகத்தில் அவர் வெளியிட்ட பதிவு பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியிருக்கும் பின்னணியிலேயே அவர் விசாரணைக்குள்ளாக்கப்பட்டுள்ளார்.

அவிசாவளை மருத்துவமனையின் தற்போதைய நிலையை விபரித்த மருத்துவர், "மக்கள் ஈக்களைப் போல இறக்கிறார்கள்" என்று தனது பதிவில் குறிப்பிட்டுள்ளார். இது தொடர்பாகவே சி.ஐ.டி.யினர் விசாரணை நடத்தியிருப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

## திருமண...

அனுமதி வழங்கப்படாது என்றும் கொரோனாத் தடுப்புக்கான தேசிய செயற்பாட்டு மத்திய நிலையத்தின் தலைவரும் இராணுவத் தளபதியுமான ஜெனரல் சவேந்திர சில்வா அறிவித்துள்ளார்.

இதன்படி வீடுகளிலோ அல்லது மண்டபங்களிலோ நிகழ்வுகளை நடத்த முடியாது என்றும் அவர் கூறியுள்ளார்.

கொரோனாத் தொற்றுப் பரவலைக் கட்டுப்படுத்தும் நோக்கில் இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதுவேளை, உணவகங்களில் ஒரே நேரத்தில் அங்குள்ள ஆசன எண்ணிக்கையில் 50 வீதமானவர்களுக்கு மட்டுமே இருக்க முடியும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

முடிந்தவரை பொது இடங்களுக்குச் செல்வதைத் தவிர்க்குமாறும் இராணுவத் தளபதி, பொதுமக்களைக் கேட்டுக்கொண்டுள்ளார். (இ)

ஈழநாடு
Eelanadu

# 2,800 கர்ப்பவதிகளுக்கு கொரோனா 21 பேர் சிகிச்சை பலனின்றி மரணம்

## சினோபார்ம், மொடர்னா, பைசர், அஸ்ட்ராசெனகா தடுப்பூசிகளை வழங்க சுகாதார அமைச்சு அனுமதி



கொழும்பு, ஓக.16

**நாட்டில் இதுவரை 2 ஆயிரத்து 800 கர்ப்பவதி தாய்மார்களுக்குக் கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது எனக் குடும்பநல சுகாதாரப் பணியகத்தின் பணிப்பாளர் விசேட மருத்துவ நிபுணர் சித்ரமாலி டி சில்வா தெரிவித்தார்.**

தொற்றுக்குள்ளான 21 கர்ப்பவதி தாய்மார்கள் சிகிச்சை பலனின்றி இதுவரை உயிரிழந்தனர் எனவும் அவர் கூறினார்.

இதனிடையே, தொற்றுக்குள்ளான 700 கர்ப்பவதி தாய்மார்கள் மருத்துவமனைகளில் சிகிச்சை பெற்று வருகின்றனர் எனவும் அவர் குறிப்பிட்டார்.

இதேவேளை, கர்பபவதி தாய்மார்களுக்கு எந்தவொரு கொரோனாத் தடுப்பூசியையும் வழங்குவதற்கு சுகாதார அமைச்சு தீர்மானித்துள்ளது.

சுகாதார அமைச்சின் ஆலோசனைக் குழுவின் பரிந்துரைக்கு அமைய இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

இதன்படி, மொடர்னா, பைசர் மற்றும் அஸ்ட்ராசெனகா தடுப்பூசிகளையும் கர்ப்பவதி தாய்மார்களுக்கு ஏற்ற முடியும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கு முன்னர் கர்ப்பவதி தாய்மார்களுக்கு சினோபார்ம் தடுப்பூசியை ஏற்றுவதற்கு மாத்திரமே பரிந்துரை செய்யப்பட்டிருந்தது. (இ)

## மரத்திலிருந்து தவறி விழுந்தபோது கையிலிருந்த கத்தி கழுத்தை வெட்டியதில் குடும்பஸ்தர் பலி

கொழும்பு, ஓக. 16

தனது வீட்டு வளாகத்திலிருந்த மரத்தை வெட்டிக்கொண்டிருந்த நபர் ஒருவர், மரத்திலிருந்து தவறி விழுந்தபோது அவரின் கையிலிருந்து கத்தி கழுத்தை வெட்டியதில் பரிதாபகரமாக உயிரிழந்தார்.

மெதகம பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ரத்தன தெனிய அராட்டுவத்த பிரதேசத்தைச் சேர்ந்த ஆர்.எம்.சிறிசேன என்ற 06 பிள்ளைகளின் தந்தையே இவ்வாறு உயிரிழந்தார்.

இந்தச் சம்பவத்தில் காயமடைந்த நபரை மொனராகலை வைத்தியசாலைக்குக் கொண்டுச் சென்ற போதிலும் வைத்தியசாலையில் சேர்க்கப்படும்போது குறித்த நபர் உயிரிழந்துள்ளார்.

சடலம், பிரேத பரிசோதனைக்காக வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது. இந்தச் சம்பவம் தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (இ)

## தனிமைப்படுத்தல் சட்டத்தை மீறி காால்பந்தாட்டத்தில் ஈடுபட்ட 11 பேர் அதிரடியாக கைது!

நோர்வூட், ஓக. 16

தனிமைப்படுத்தல் சட்டத்தை மீறி கால்பந்தாட்டத்தில் ஈடுபட்ட 11 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்று நோர்வூட் பொலிஸார் தெரிவித்தனர்.

நோர்வூட் போட்ரி மைதானத்தில் வைத்தே இவர்கள் நேற்று இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

மேற்படி மைதானத்தில் தனிமைப்படுத்தல் சட்டத்தை மீறி அயரபி மற்றும் போட்ரி தோட்டங்களைச் சேர்ந்த சுமார் 40 இற்கும் மேற்பட்டவர்கள் கால்பந்தாட்டத்தில் ஈடுபடுகின்றனர் என்று பொலிஸாருக்குத் தகவல் கிடைத்துள்ளது.

இதையடுத்தே மைதானம் சுற்றிவளைக்கப்பட்டது. பொலிஸாரைக் கண்டதும் அங்கிருந்தவர்கள் தம்பியோடியுள்ளனர். போட்டியை ஏற்பாடு செய்தவர்களும் தலைமறைவாகியுள்ளனர். எனினும், 11 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர். ஏனையோரைக் கைதுசெய்வதற்கான நடவடிக்கை முன்னெடுக்கப்படுகின்றது.

இதேவேளை, கைதுசெய்யப்பட்ட 11 போரையும் விசாரணைகளின் பின்னர் இன்று ஹற்றன் நீதிவான் முன்னிலையில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்றும் நோர்வூட் பொலிஸார் மேலும் குறிப்பிட்டனர். (இ)

## வெயாங்கொடையில் கடைகளுக்குப் பூட்டு!

கம்பஹா, ஓக. 16

கம்பஹா மாவட்டம், வெயாங்கொடையில் உள்ள அனைத்துக் கடைகளையும் ஒரு வாரத்துக்கு மூடுவதற்குத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது என வெயாங்கொடை வர்த்தகர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

அதற்கமைய வெயாங்கொடை தொழிற்சங்கத்தைச் சேர்ந்த அனைத்துக் கடைகளும் நேற்றிலிருந்து மூடப்பட்டுள்ளன. எதிர்வரும் 21ஆம் திகதி வரை குறித்த கடைகள் மூடப்பட்டிருக்கும். வெயாங்கொடைப் பகுதியில் அதிக கொரோனாத் தொற்றாளர்கள் பதிவாகுகின்றனர் எனவும், தொற்று மேலும் பரவாமல் தடுப்பதற்கான நடவடிக்கையாகக் கடைகளை மூடுவதற்கு வர்த்தகர்கள் சங்கம் முடிவு செய்துள்ளது எனவும் அதன் தலைவர் எஸ்.ஐ.எஸ். வீரசிங்க தெரிவித்துள்ளார். (இ)

## யானையை கொன்று தந்தங்களை வெட்டி எடுத்துச் சென்ற விஷமிகள்!

### பொலிஸார் தீவிர விசாரணை

கொழும்பு, ஓக. 16

யால வனவிலங்குத் திணைக்களத்துக்கு உரித்தான வள்ளிமாதாகம பிரதேசத்தில், விஷமிகள் சிலர் யானை ஒன்றைக் கொன்று அதனது தந்தங்கள் இரண்டு மற்றும் வால் பகுதியை வெட்டி எடுத்துச் சென்றுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்துள்ளார்.

குறித்த யானை நேற்று அதிகாலை கொல்லப்பட்டிருக்கலாம் என்று வனவிலங்குத் திணைக்கள அதிகாரிகள் சந்தேகம் தெரிவித்துள்ளனர்.

யானையின் தும்பிக்கைப் பகுதி வெட்டப்பட்டு தந்தங்கள் இரண்டும் எடுக்கப்பட்டுள்ளன என்றும், அதேபோன்று யானையின் வால் பகுதியும் வெட்டப்பட்டுள்ளது என்றும் வனவிலங்குத் திணைக்கள அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

கதிர்காமம் பொலிஸாருக்கு வழங்கப்பட்டத் தகவலுக்கமைய கொல்லப்பட்ட யானையின் சடலம் நேற்று மீட்கப்பட்டுள்ளது.

யானை கொல்லப்பட்டமை தொடர்பில் கதிர்காமம் வனவலங்குத் திணைக்கள அதிகாரிகளும் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர். இது தொடர்பில் பொலிஸார் தீவிர விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (இ)

## ஆப்கானிஸ்தானிலுள்ள இலங்கையர்களை உடனடியாக அழைத்துவர விசேட ஏற்பாடுகள்

கொழும்பு, ஓக. 16

உள்நாட்டுப் போர் வலுப்பெற்றுள்ள ஆப்கானிஸ்தானிலுள்ள இலங்கையர்களை நாட்டுக்கு உடனடியாக அழைத்து வருவதற்கான விசேட வேலைத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது என வெளிவிவகார அமைச்சு அறிவித்துள்ளது.

சுமார் 50 இலங்கையர்கள் ஆப்கானிஸ்தானில் வசிக்கின்றனர் என்று வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது.

43 இலங்கையர்கள் காபுல் நகரிலுள்ள ஐக்கிய நாடுகள் சபைக்கான தூதரகத்தில் பணியாற்றுவதாக அறிக்கையிடப்பட்டுள்ளது என ஆப்கானிஸ்தானுக்கான இலங்கைத் தூதரகத்தின் சிரேஷ்ட அதிகாரி ஒருவர் குறிப்பிட்டுள்ளார்.

அவர்களில் பெரும்பாலானோர் இலங்கைக்குத் திரும்புவதற்கான விமானப் பயணச்சீட்டுகளை முன்பதிவு செய்துள்ளனர் எனவும் அவர் கூறியுள்ளார்.

அந்நாட்டில் காணப்படும் விமான சேவைக்கான வசதிகளுக்கு அமைய, இலங்கையர்கள் நாடு திரும்பவுள்ளனர்.

20 வருடங்களாக ஆப்கானிஸ்தான் இராணுவத்தின் போர் நடவடிக்கையில் இணைந்திருந்த அமெரிக்கா உள்ளிட்ட பிரபல மேற்குலக நாடுகளின் இராணுவத்தினர் அங்கிருந்து வெளியேறியதன் பின்னர் தலிபான்கள், ஆப்கானிஸ்தானின் அதிகாரத்தைக் கைப்பற்ற தமது போராட்டத்தை வலுப்படுத்தினர்.

அதற்கமைய, ஆப்கானிஸ்தானின் தலைநகரானா காபுல் நகரத்திலும் நேற்றுப் பிற்பகல் தலிபான்கள் உள்நுழைந்துள்ளனர்.

அந்நாட்டின் ஏனைய பிரபல நகரங்களை தலிபான்கள் ஏற்கனவே கைப்பற்றியுள்ளனர்.

தற்போதைய சூழ்நிலையில், காபுல் நகரிலுள்ள வெளிநாட்டு இராஜதந்திரிகளைப் பாதுகாப்பாக வெளியேற்றுவதற்காக அமெரிக்கத் துருப்பினர் ஆப்கானிஸ்தானுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர். (இ)




## மீரிகம பிரதேச சபைக்குள் கொரோனா; 3 உறுப்பினர்களுக்கு தொற்று உறுதி

கொழும்பு, ஓக. 16

மீரிகம பிரதேச சபையின் உறுப்பினர்கள் மூவருக்குக் கொரோனா வைரஸ் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

இந்தத் தகவலை மீரிகம பிரதேச சபையின் தவிசாளர் சரத் நந்தசிறி ரணதுங்க ஊடகங்களிடம் தெரிவித்தார்.

இதையடுத்து தொற்றாளர்களுடன் தொடர்பைப் பேணியவர்கள் தனிமைப்படுத்தப்பட் டுள்ளதுடன் அவர்களைக் கொரோனாப் பரிசோதனைக்கு உட்படுத்துவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

தொற்றுக்குள்ளான உறுப்பினர்களில் ஒருவர் கடந்த சில தினங்களுக்கு முன்பு இடம்பெற்ற பிரதேச சபை கூட்டத்தில் கலந்துகொண்ட நிலையில், அன்றைய தினம் கலந்துகொண்ட உறுப்பினர்கள் அனைவரும் தொற்றாளர்களுடன் முதல் தொடர்பைப் பேணியவர்கள் என்ற அடிப்படையில் அன்ரிஜென் பரிசோதனைக்கு உட்படுத்தப்படவுள்ளனர் என்று மீரிகம பிர தேச சபையின் தவிசாளர் மேலும் கூறினார். (இ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 16.08.2021 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# இன்றைய தொலைக்காட்சி நிகழ்ச்சி நிரல்

**காலை**
6.00 மணி : பக்திப்பாடல்கள்
6.30 மணி : வணக்கம் டான்



6.35 மணி : மதம் சார்பான நற்சிந்தனைகள்
6.55 மணி : இன்றைய பலன்
7.05 மணி : உளவியல் கருத்து-
உளவளத்துனையாளர் நா.நவராஜ்
7.15 மணி : கதைவழி அறமொழி
வழங்குபவர் : பண்டிதர் திருநாவுக்கரசு
7.20 மணி : சித்த மருத்துவம்
வழங்குபவர் டாக்டர் விவியன் சத்தியசீலன்
7.30 மணி : இன்றைய பத்திரிகைகளில்
8.30 மணி : காலை செய்திகள்
9.00 மணி : கலாட்டா காலை (நேரலை)
10.30 மணி : தொடர் நாடகம்-சிங்கப் பெண்ணே
11.00 மணி : சுப்பர் குறூப்-மறுஒளிபரப்பு

**பகல்**
12.00 மணி : சிரிக்கலாம் வாங்க-நேரலை
நகைச்சுவை நிகழ்ச்சி
1.00 மணி : அறிந்தும் அறியாமலும்
( மறு ஒளிபரப்பு )
1.30 மணி : சுப்பர் சீன்ஸ்-அயோக்கியா,அட்டக்கத்தி
ஆகிய திரைப்பட காட்சிகள்
4.30 மணி : குட்டீஸ் தர்பார்- சிறுவர்களை
மகிழ்வூட்டும் நேரலை நிகழ்ச்சி



5.30 மணி : குறுந்திரை நேரம்
6.00 மணி : ரெயிலர் ரைம்
06.30 மணி : நலந்தானா-வைத்தியர்
எஸ்.யமுனாநந்தா



**இரவு**
7.00 மணி : சொற்சமர் -பாடசாலை
மாணவர்களுக்கான விவாத நிகழ்ச்சி
இவ்வாரம் -தமிழ் சினிமாவில் இலக்கிய
சுவையை அதிகம் கொடுத்தவர் கவியரசு?
புட்டுக்கோட்டை?



8.00 மணி : இரவுச் செய்திகள்
9.00 மணி : சாட்சியம்
10.00 மணி : நேருக்கு நேர்

**காலை**
6.00 மணி : சிரி சிரி சிரி
8.00 மணி : சிரிப்பு சரடிவெடி
10.00 மணி : ஒரு பட கொமடி
11.00 மணி : சிரிப்போ சிரிப்பு

**பகல்**
1.00 மணி : நகைச்சுவை மன்னன்
கவுண்டமணி செந்தில் நடிப்பில் கலக்கல் காட்சிகள்
3.00 மணி : குண்டக்க மண்டக்க
5.00 மணி : ஒரு பட கொமடி
6.00 மணி : கொமடி கலாட்டா

**இரவு**
8.00 மணி : ஒரு படக்கொமடி
9.00 மணி : சிரிப்போ சிரிப்பு
10.00 மணி : விடிய விடிய சிரிப்பு தான்

**காலை**
6.00 மணி : பனிப்பூக்கள்
7.00 மணி : திசை எட்டும் இசை எட்டும்
8.00 மணி : வணக்கம் டான் மியூசிக்
9.00 மணி : மெல்லிசை
10.00 மணி : கேட்டாலே பரவசம் (நேரலை)

**பகல்**
12.00 மணி : ராஜா ராணி
1.00 மணி : விசை இசை
3.00 மணி : வட்ஸ் அப் (நேரலை)
4.00 மணி : டீ டைம் ராகங்கள் (நேரலை)
5.00 மணி : இனிது இனிது
6.00 மணி : என்றென்றும் இசை
7.00 மணி : ஓய்வெடு நிலவே

**இரவு**
8.00 மணி : காற்றில் வரும் கீதம்
9.00 மணி : நிலவு தூங்கும் நேரம்

**காலை**
5.15 மணி : தரம் 06 - விஞ்ஞானம்
6.00 மணி : தரம் 07 - தமிழ்
6.45 மணி : தரம் 08 - தமிழ்
7.30 மணி : தரம் 09 - கணிதம்
8.15 மணி : தரம் 10 - கணிதம்
9.00 மணி : க.பொ.த உயர்தரம் (கலைப்பிரிவு)
நாடகமும் அரங்கியலும்
10.00 மணி : க.பொ.த உயர்தரம் (வணிகப்பிரிவு)
வணிகக்கல்வி
11.00 மணி : க.பொ.த உயர்தரம்
(கணிதம்,விஞ்ஞானப்பிரிவு) உயிரியல்

**பகல்**
12.00 மணி : தரம் 06 - விஞ்ஞானம்
1.00 மணி : தரம் 07 - தமிழ்
2.00 மணி : தரம் 08 - தமிழ்
3.00 மணி : க.பொ.த சாதாரண தரம் சங்கீதம்
3.40 மணி : க.பொ.த சாதாரண தரம் விஞ்ஞானம்
4.20 மணி : க.பொ.த சாதாரண தரம் விஞ்ஞானம்
5.00 மணி : க.பொ.த சாதாரண தரம் சித்திரம்
5.40 மணி : க.பொ.த சாதாரண தரம் புவியியல்
6.20 மணி : க.பொ.த சாதாரண தரம்
மாதிரி வினாத்தாள்

**இரவு**
7.00 மணி : க.பொ.த சாதாரண தரம்
மாதிரி வினாத்தாள்

**காலை**
5.00 மணி : சிவாய மந்திரம்
6.00 மணி : சுப்ரபாதம்
6.30 மணி : சுப்ரபாதம்
07.00 மணி : இன்றைய சிந்தனை
07.05 மணி : இன்றைய நாள்
07.30 மணி : மங்கள இசை
08.00 மணி : அருளுரை
08.30 மணி : திருவாசகம்
09.00 மணி : திருவிழா-01
10.00 மணி : பாடல்கள்
10.30 மணி : பஜனை
11.00 மணி : பக்திமலர்

**பகல்**
12.00 மணி : திரையில் பக்தி
12.30 மணி : திருவிழா-02
6.00 மணி : கந்தசஷ்டி கவசம்

**இரவு**
7.00 மணி : செய்திகள்
7.30 மணி : அருளுரை

**காலை**
7.00 மணி : நாளொரு நற்சிந்தனை
8.00 மணி : ஜெபமாலை
9.00 மணி : திருப்பலிப்பாடல்கள்
09.30 மணி : மன்றாடு
10.00 மணி: நாளொரு நற்சிந்தனை
(மறு ஒலிபரப்பு)
10.30மணி : திருப்பலி (யாழ்ப்பாணம்)
11.30 மணி : ஜெபமாலை

**பகல்**
12.00 மணி : திருப்பலி (திருகோணமலை)
01.00 மணி : திருப்பலி (மட்டக்களப்பு)
02.00 மணி : நற்சிந்தனை
03.00 மணி : திருப்பலி (யாழ்ப்பாணம்)
04.00 மணி: திருப்பலி (மட்டக்களப்பு)
05.00 மணி : திருப்பலி (திருகோணமலை)
06.00 மணி : நாளொரு நற்சிந்தனை
(மறு ஒலிபரப்பு)

**காலை**
6.00 மணி : கிராத்
7.00 மணி : இறை சிந்தனை
7.30 மணி : இஸ்லாமிய பாடல்
8.00 மணி : கலந்துரையாடல்
9.00 மணி : இஸ்லாமிய சீரிஸ்
10.00 மணி : மனதோடு பேசலாம்
10.30 மணி : கண் வசண்ணம் கை வண்ணம்
11.00 மணி : சுவனப்பாதை
11.30 மணி : வரலாறு சொல்லும் வைத்தியம்

**பகல்**
12.00 மணி : லுகர் அதான்
12.30 மணி : இஜ்லாமிய வரலாறு
1.00 மணி : இஸ்லாமிய திரைப்படம்
2.00 மணி : கஸீதா
2.30 மணி : இறை சிந்தனை
3.00 மணி : பாடல்கள்
3.30 மணி : பள்ளிவாசல் ஆவணப்படம்
4.00 மணி : சிறுவர் இஸ்லமிய கார்டூன்
5.00 மணி : இறை தென்றல்
6.00 மணி : தாஜீமதுல் குர்ஆன்

**இரவு**
7.00 மணி : பிறை பிரசங்கம்
8.00 மணி : இஸ்லாமிய வரலாறு